# ஞானச்சுடர்



மாசி மலர் 2008



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடு வாழ்வார்**

பொருள்: கடவுளை எப்பொழுதும் நினைப்பவர் முக்தி உலகில் எப்பொழுதும் வாழ்வர். (3)

**வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்**
**கியாண்டு மிடும்பை யில**

பொருள்: விருப்புவெறுப்பற்றவராகிய கடவுளை நினைப்பவருக்கு ஒருபோதும் கவலை உண்டாகாது. (4)



# நற்சிந்தனை

## அபயப்பத்து

## அபயமைந்து

சூலப் படையாய் சுண்ணப் பொடியாய் துடிக்கை யுடையானே
காலக்கடையாய் கோலக்கொடியாய் கங்கைச் சடையானே
நீலக் கொடிபோல் மடவாளுமையாள் நேசிக் கும்பொருளே
கோலக் குலாடு சூழு மிலங்கைக் குழகா வுனக்கபயம் 4

பூக்கை கொண்டு போற்று மடியார் புறத்தே யலையாதே
காக்கும் பொருளே கதிசேர் விடத்தாய் கண்ணன்
கமலத்தான்
ஏக்க மொழிப்பீர் எழில்சேர் சுடராய்ப் படர்ந்த பரஞ்சோதி
பூக்கும் பொழில்சேர் இலங்கை வாழும் புனிதா வுனக்கபயம்
5

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் -122

## 2008 மாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| என்கடன்பணி செய்து கிடப்பதே | கு. சோமசுந்தரம் | 1 - 2 |
| மனம் என்னும் ஆறாம் அறிவு | நா. நல்லதம்பி | 3 - 6 |
| நக்கீரர் அருளிய நன்முருகாற்.......... | பா. சிவனேஸ்வரி | 7 - 10 |
| கலையானது மனிதனை....... | செல்வி ச. சர்மிலா | 11 - 13 |
| திருவாசகம் உபநிடதசாரம் | இ. சாந்தகுமார் | 14 - 16 |
| சரவணபவப் பத்து | செல்வன் தி. மயூரகிரிசர்மா | 17 - 18 |
| காளமேகம் கவித்திறன் | வல்வையூர் அப்பாண்ணா | 19 - 21 |
| சூரிய நாராயணன் | கே.எஸ். சிவஞானராஜா | 22 - 23 |
| கதிர்காமக் கந்தனின் திவ்விய.... | வ. குமாரசாமி ஐயர் | 24 - 25 |
| போற்றிப்பாடி வழிபட்டு உய்வோமாக | ஐ.கோ. சந்திரசேகரம் | 26 - 28 |
| இன்பமே சூழ்க எல்லோரும்....... | திருமதி சி. யோகேஸ்வரி | 29 - 31 |
| யார், எதை, எங்கே, எப்படி....... | கோப்பாய் சிவம் | 32 - 34 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவ. மகாலிங்கம் | 35 - 39 |
| வாரியார் பக்கம் | | 40 - 41 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 42 - 45 |
| இருள் நீக்கி யருள் சூட்டும்...... | க. தெய்வேந்திரம் | - 46 |
| தமிழக திருக்கோயில் வரிசையில்.... | | 47 - 48 |



அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

பதிவு இல. Q.D./60/NEWS/2008

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

# ஞானச்சுடர்

## தைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடரின் 11ஆவது ஆண்டின் முதலாவது மலரை திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் மங்களகரமாக வெளியீடு செய்து வைத்தார்கள்.

ஞானச்சுடரானது சூரியன் தவறாது தனது கடமையைச் செய்து தினமும் பிரகாசிப்பதுபோல இம்மலரும் தனது சிறப்பினை கடந்த 10வருடங்களாக மாதந்தோறும் பிரகாசித்து தற்பொழுது 11ஆவது வருடமும் பிரகாசிக்கத் தொடங்கியிருப்பது சாதாரண ஒரு காரியமல்ல என்பதையும், 121ஆவது இம்மலரினை வெளியீடு செய்வதற்கு தனக்குச் சந்தர்ப்பம் வழங்கியதற்கு திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் தனது நன்றியினைத் தெரிவித்தார்கள்.

ஆரம்பகாலத்தில் சிறிய அளவில் ஆரம்பித்த ஞானச்சுடர் சஞ்சிகையின் செயற்பாடு இன்று உலகெங்கும் சென்று தனது சமய தத்துவங்களையும், சைவ சமயத்தின் பெருமையையும், அதன் மகிமையின் சிறப்பினையும் பரப்பி சைவர்களை வளர்த்து வருகின்றது. அதுமட்டுமன்றி, இவ்வாச்சிரமம் அன்னதானப்பணி, சமூகப்பணி என்பவற்றைவிட அறிவுப் பசியைப்போக்கும் வகையில் ஞானச்சுடர் சஞ்சிகையை மிகச்சிறப்பாக வெளியீடு செய்கிறார்கள். இம்மலர் மென்மேலும் சிறப்புற்று விளங்கவேண்டும்மென்று கூறி தனது வெளியீட்டுரையை நிறைவுசெய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

மலருக்கான மதிப்பீட்டுரையை அதிபர் ஆ. சிவநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள். பொதுவாக ஆச்சிரமம், பேரவை செய்கின்ற பணிகளில் ஒரு பணியைக்கூட எங்களால் செய்யமுடியாது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என திரு சிவநாதன் அவர்கள் தனது ஆரம்ப உரையில் குறிப்பிட்டு இதில் திருவருள் துணையாக இருப்பதையும் வெளிப்படுத்தினார்கள்.

இங்கே இடம்பெறும் பணிகளில் ஞானச்சுடர் வெளியீடே தலையாய பணியாக இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். சாதாரணமாக வெள்ளிநிகழ்வு நடக்கும்பொழுது அதில் பங்குபற்றுபவர்களே பயனடைவார்கள். ஆனால் ஞானச்சுடரில் வெளிவரும் கருத்துக்கள் உலகம் முழுவதும் உள்ள அன்பர்களைச் சென்றடைகின்றது எனவும் குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல ஞானச்சுடர் செல்லும் இடங்களில் எல்லாம் அவர்கள் சந்நிதியானை நினைப்பதற்கும் வணங்குவதற்கும் ஒரு காரணமாக இது விளங்கி வருவதையும் எடுத்துக்காட்டினார்கள்.

2008ஆம் ஆண்டு தைமாத மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் உள்ள ஆழமான கருத்துக்களை அடியார்களுக்கு இரத்தினச் சுருக்கமாக எடுத்துக்கூறி எமது சமயம் தொடர்பான நலிவுகளை நீக்கும் வகையில் ஞானச்சுடர் வெளிவந்து கொண்டிருப்பதையும் பாராட்டி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

# சுடர் தரும் தகவல்

ஒரு செயற்பாட்டின் வெற்றிக்கு, அல்லது ஒரு மனிதனது செயற்பாட்டின் வெற்றிக்கு விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் காரணமாக அமைகின்றது என்பதை கண்கூடாக நாம் காணுகின்றோம்.

அவ்வகையாக மேற்கொள்ளப்படும் முயற்சிக்கு கிடைக்கும் வெற்றியானது சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் அமைவதற்கு மூன்று அம்சங்களைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டியது அவசியமாகின்றது.

முதலாவதாக மேற்கொள்ளப்படும் முயற்சியானது சாதாரண முயற்சியாக அல்லாது விடாமுயற்சியாக அமைய வேண்டும். அதாவது ஒரு தடவைக்குப் பதிலாக பலமுறை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் முயற்சியால் மட்டும்தான் வெற்றி இலக்கை அடையலாம்.

இலக்கை அடைய விரும்புகின்றவனுக்கு முதலில் தன்னம்பிக்கையின் தன்மையைப் பொறுத்தேதான் அவனது முயற்சியும் முயற்சியின் அளவும் தீர்மானிக்கப்படுகின்றது. இங்கே மற்றவர்களது கருத்து, நம்பிக்கை என்பவற்றைவிட சம்பந்தப்பட்டவர் அந்த முயற்சியில் வைத்திருக்கின்ற அந்த நம்பிக்கைதான் பிரதானமானது. இத் தன்மையின்மூலமும் நாம் வெற்றிக்கான பாதையை அடையலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக நாம் செய்யும் முயற்சியானது அல்லது எம்மால் மேற்கொள்ளப்படும் செய்கையானது தருமத்தின் வழிப்பட்டதா? நியாயமானதா? உண்மையானதா? என்பது மிகவும் முக்கியம் வாய்ந்தனவாக இருக்கவேண்டும். அதனை நாம் உணர்ந்து செயற்படவேண்டுமானால் அதன்மூலம் கிடைக்கும் வெற்றி நிரந்தரமானதாக இருக்கும். சமுதாயத்தில் எவ்வளவு தடை ஏற்பட்டாலும்கூட இறுதியில் எம்மால் அந்த வெற்றி இலக்கை அடையலாம்.

இதைத்தான் இராமகிருஸ்ண பரமஹம்சர் நாங்கள் செய்கின்ற காரியங்கள், உண்மையானதாகவும் நியாயமானதாகவும் இருந்து அதனை தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் தொடரும்பொழுது முழு உலகமே எதிர்த்தாலும் அந்த முயற்சியில் நாம் வெற்றியடைய முடியும் எனக் குறிப்பிடுகின்றார்.

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க. இல. 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| T.P.NO. 021- 2263406 | பருத்தித்துறை. |

**www. sannithiyan. org**

# சந்நிதி ~ திருப்புகழ்

காசினி தனிலுன்னைக்
கந்தாவென் றேயழைத்துக்
கைகூப்பி நின்றவர்க்கும்
காத்திடு வாயென்று
காலையும் மாலையும்
கண்ணாலே பார்ப்பவர்க்கும்

மாசிலன் மைந்தனே
மரகத மயின் மிசை
வாவென்றே அரற்றினர்க்கும்
வந்தருள் புரிந்திடும்
வரதனே குகனே
வள்ளலே வடி வேலவா!

தேசுடை முகங்கள்
ஆறுடன் கரங்கள்
திகழ் பன் னிரண்டு முடனே
தேசமெல்லாம் புகழ
சேவற் கொடி யுடனே
தேடி யெமை யுடன் வருவாய்

பூசுரர்களாகி
வாயினையே கட்டிப்
பூசை செய ஏற்கும்
புவனங்கள் போற்ற
அற்புதம் புரியும்
புண்ணியா சந்நிதிப் பெருமாளே

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம் ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலவனார்.*

உ

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு செ. சம்பந்தநாதன்**

(லண்டன்)

**திரு ந. யோகேஸ்வரன்**

(பாடசாலை வீதி, கோண்டாவில்)

**திரு த. இராசேஸ்வரன்**

(இராஜ உதயம் அல்வாய்)

**திரு V.R. கனகராசா**

(ஆளணி முகாமையாளர், இ.போ.ச)

**திரு ம. இரங்கநாதன் (ஆசிரியர்)**

(நெல்லியோடை அச்சுவேலி)

**திரு த. விவேகானந்தன்**

(சிவசக்தி பல்பொருள் வாணிபம், மந்திகை)

**தலைவர் / செயலாளர்**

வேவிலந்தை முத்துமாரியம்மன் தேவஸ்தானம், அல்வாய்)

**திரு சி. பத்மநாதன் J.P**

(கனன் போட்டோ பிரதி நிலையம், பருத்தித்துறை)

**திரு V.S.P குமார் (ஸ்ரீகுமார்)**

(உரிமையாளர் கல்பனா ஸ்ரோர்ஸ் அச்சுவேலி)

**திரு சு. இராமச்சந்திரன் (ரலன்ற்)**

(குடவத்தை துன்னாலை தெற்கு)

**திரு சி. சிவம்**

(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை நெல்லியடி)

**திரு வ. நந்தகுமார்**

(அம்மன் கோவிலடி, கரணவாய்தெற்கு)

**உரிமையாளர்**

(ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி)

**திரு சி. மகாலிங்கம் J.P**

(மலையன் தோட்டம் கொற்றாவத்தை)

**திரு சு. சிவதாசன் G.S**

(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

**தலைவர் - செயலாளர்**

(கலைவாணி ச. ச. நிலையம் தொண்டைமானாறு)

**திரு சு. செல்வரத்தினம்**

(K.K.S வீதி, சுண்ணாகம்)

**உரிமையாளர்**

(ஜெயகிருஸ்ணா K.K.S வீதி சுண்ணாகம்)

**உரிமையாளர்**

(புகழ் ஸ்ரோர்ஸ் K.K.S வீதி சுண்ணாகம்)

**திரு ஐ. லோகஞானம்**

(பிரதம அஞ்சல் அதிபர் சுண்ணாகம்)

**உரிமையாளர்**

(உதயன் விற்பனை நிலையம் சங்கானை)

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்**

(முருகமூர்த்தி வீதி, சங்கானை)

**திரு ஆ. விஸ்வலிங்கம்**

(இளைப்பாறிய ஓவசியர் சுண்ணாகம்)

**திரு செ. நவரத்தினராசா J.P**

(கப்புது குப்பிளான்)

**திரு V. அரியராசா**

(இளை, வரைவல்லுனர் தொண்டைமானாறு)

**திரு அ. அரியகுமார் (அதிபர்)**

(யா/ சித்திவிநாயகர் பாடசாலை, பருத்தித்துறை)

**திரு க. இரத்தினசிங்கம் J.P**

(இளை, கிராமசேவையாளர் கரணவாய் மத்தி)

**திரு க. குணலிங்கம்**

(கரணவாய் மத்தி)

**திரு என். இரவீந்திரன்**

(இளை. மக்கள் வங்கி உதவிமுகாமையாளர் உரும்பராய்)

**திரு க. யோகேந்திரநாதன்**

(கிராம உத்தியோகத்தர் குடத்தனை)

**ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்**

(303, K.K.S வீதி யாழ்ப்பாணம்)

**திரு செ. சந்திரமூர்த்தி**

(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம் உடுப்பிட்டி)

**லயன் அ.க.த கிருஸ்ணராஜா**

(சமாதான நீதிவான் உரும்பராய்)

**திரு சி. பஞ்சலிங்கம்**

(ஞானவைரவர் கோயிலடி, உரும்பராய் கிழக்கு)

**செல்வி ஷாலினி தேவேந்திரா**

(ஒஸ்கா வீதி, உரும்பராய்)

**திரு இ. குமாரதாஸன்**

(இளைப்பாறிய பிராந்திய மருந்தாளர் யாழ்)

**திரு சி. குகதாஸன்**

(தேவாலய வீதி, சங்கானை)

**உரிமையாளர்**

(உதயா பேக்ஹவுஸ் வல்லைவீதி, சங்கானை)

**திருமதி த. சுரேந்திரநாதன்**

(இளை அதிபர் மயிலியதனை தொண்டைமானாறு)


**அதிபர்**

(தொண்டைமானாறு, வீ. ம. வித்தியாலயம்)

உ

# அமரர் தியாகராசா மகேஸ்வரன்

## அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு



அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு 15.02.2008 வெள்ளிக்கிழமை ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் திரு க. அருள்லிங்கம் தலைமையில் சிறப்பான முறையில் இடம்பெற்றது. ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வில் முதலாவதாக ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விஷேட அபிஷேகபூசை நிகழ்வினைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் வரிசையில் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் சொற்பொழிவு ஆற்ற வருகைபுரிந்த சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை ஆசிரியர் ந. கைலைநாதன் அவர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்னும் பொருளில் அமரர் திரு தி. மகேஸ்வரன் அவர்களது பணியினை மேம்படுத்தி சபையில் உள்ளவர்களுக்கு எடுத்துக்கூறியதன் பிரகாரம் பிரார்த்தனை நிகழ்வு ஆரம்பமாகியது.

பிரார்த்தனை நிகழ்வின் தொடர்ச்சியாக வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் அவர்கள் தமது அஞ்சலி உரையில் அமரர் அவர்கள் சைவசமயத்திற்கும், சைவத் தமிழ் மக்களுக்கும் ஆற்றிய சேவையினை வெகு சிறப்பாக எடுத்துக்கூறியதோடு, அன்றைய தினம் எமது வாராந்த நிகழ்வுகள் வரிசையில் நடைபெற்ற "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற வாக்கிற்கு அமைவாக வாழ்ந்துகாட்டியவர் அமரர் மகேஸ்வரன் என்பதை எடுத்துக்கூறினார்கள்.

அடுத்து செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள் தமது அஞ்சலி உரையில் சமயத்திற்கு அப்பாற்பட்டு அமரர் அவர்கள் ஆற்றிய பணிகளைப்பற்றி குறிப்பாக நலிவுற்ற மக்களுக்காக இரவு பகல் பாராது சேவையாற்றிய ஒரு உத்தமர் என்பதை சிறப்பாக எடுத்துக்கூறினார்கள். தொடர்ந்து மகாராணி புடவையக உரிமையாளர் திரு க. சோமசேகரம் அவர்கள் எந்த நேரத்தில் எந்த உதவியைக் கேட்டாலும் மறுக்காது செய்து உதவியவர் என்றும், அமரரைப்போல் இனிமேல் இப்படியான பணிகளைச் செய்வதற்கு ஒருவரும் தோன்றமாட்டார்கள் என்ற கருத்தை முன்வைத்தார்கள்.

சிறப்பு நிகழ்வாக சந்நிதியானைத் தஞ்சமென வாழ்ந்து வருகின்ற அடியவர்களுக்கு அமரர் திரு தி. மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக உடுபுடவைகளோடு பணமும் வழங்கப்பட்டது. இறுதியாக அறுபத்துமூன்று நாயன்மார்களது குருபூசை மண்டபத்தில் குருபூசை நிகழ்வுடன் இவ் ஆத்மாசாந்திப்பிரார்த்தனை நிகழ்வு நிறைவுபெற்றது.

உ

# "என் கடன்பணி செய்து கிடப்பதே"

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

"என் கடன் பணி செய்து கிடப்பதே", என்னும் மகுட வாசகத்தை அப்பர் அடிகள் நமக்கு ஈந்துள்ளார். கொடைகள் எல்லாவற்றிலும் மேலான கொடையாக அது விளங்குகிறது. "பணி புரி பலனை எதிர்பாராதே", என்பது பகவத் கீதை தரும் மகத்தான கருத்துப் புதையல். ஏதாவதைக் கைம்மாறாக எதிர்பார்த்துக் கருமமாற்றுகின்ற இக்காலத்தில், இம் மகுட வாசகங்கள் பெரும்பாலான மக்களிடையே எடுபடுவதில்லை. ஆனாலும் மக்களால் அவ்வாசகங்கள் இன்னமும் மறக்கப்படவில்லை என்பது மட்டும் உண்மை. ஏனென்றால், மேடைப் பேச்சுக்களிலும், உரையாடல்களிலும் அவை தாராளமாகக் கையாளப்பட்டு வருகின்றன. இம் மகுட வாசகங்கள் போதனையில் உண்டு; சாதனையில் இல்லை. அதுவே இன்றைய வேதனைகளுக்கெல்லாம் காரணமாகும்.

"என் கடன்பணி செய்து கிடப்பதே"; "பணிபுரி பலனை எதிர்பாராதே" இன்றைய நிலைமையைப் பற்றிச் சிந்தித்துப்பாருங்கள். பெரும்பாலானோர், தக்க பலனை எதிர் பார்த்தே பணி செய்கிறார்கள். இதனிலும் வேடிக்கை என்னவென்றால், பெரும்பாலானோர், பலனைக் கைகளில் பெற்றுக்கொண்டதை உறுதி செய்த பின்னரே பணி செய்யத் தொடங்குகிறார்கள். கைலஞ்சம், கைக்கூலி என்பன இந்த வகையிலேதான் இன்று பெருகிக் காணப்படுகின்றன. கைலஞ்சம் பெறுதல் என்பது சட்டப்படி குற்றம்; பெறுதல் மட்டுமன்று, கொடுத்தலும் குற்றமாகும். சைவசமய சாத்திரங்களின் படியும் கைலஞ்சம் பெறுதலும், கொடுத்தலும் தெய்வ தண்டனைக்குரிய பெருங் குற்றங்களாகும். சட்டத்திற்குத் தப்பினாலும், தெய்வ தண்டனைக்கு ஒருபோதும் தப்பிவிட முடியாது. அனுபவித்துத்தான் ஆகவேண்டும். இதனை, இன்று, பலர் உணராமல் இருக்கிறார்கள் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

ஒவ்வொரு மனிதனுக்கும் விதிக்கப்பட்ட கடமைகள் இருக்கின்றன. அவற்றை மறக்காமல் செய்து வரவேண்டும். கடமைகளைச் சரியாக நிறைவேற்றாமல் விடுதல் பாவகாரியமாகும். ஒவ்வொருவரும் தந்தம் கடமைகளை முட்டின்றி நிறைவேற்றுதல், அவற்றை ஒழுங்காகச் செய்துமுடித்தல்தான், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதன் உள்ளடக்கம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்பன நான்கு புருஷார்த்தங்கள் அல்லது வாழ்க்கைப் பயன்களாக நம் முன்னோர் வகுத்துள்ளனர். இவற்றை நீதி நெறியில் நின்று பெற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

அறம் என்பது ஈதல். பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகளுள், அறம் செய்தல் தலையாய கடனாகும். அதனாலேயே "அறஞ் செய்ய விரும்பு" என்கிறார் ஔவைப்பிராட்டியார். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுளெல்லாந் தலை" என்கிறது தமிழ்மறை. அறஞ்செய்தலாவது நம்மிடம் இருப்பதைப் பலருடனும் பகிர்ந்துகொள்வது

ஆகும். பொருள், பணம், பண்டம், உணவு என்பனவற்றை மட்டுமல்ல அன்பையும், பண்புகளையும் கூடப்பகிர்ந்து கொள்வது அறமாகும். நம்மிடம் உள்ள அறிவைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளலும் அற மாகும்.

அன்னதானம், வித்தியாதானம், பூதானம், கோதானம் எனத் தானங்கள் பல வகை. பசித்து வருபவர்களின் பசியை ஆற்றுவது மிகச்சிறந்த அறம். பசி இரு வகை; ஒன்று வயிற்றுப்பசி, மற்றையது அறிவுப்பசி. உணவை வழங்கி வயிற்றுப்பசியை நீக்கலாம்; கல்வியை வழங்கி அறிவுப்பசியை அகற்றலாம். இந்த இரண்டு தானங்களையும், உள்ளவர்கள் இல்லையென்னாது வழங்கவேண்டும்.

எல்லோரும் செய்யவேண்டிய கடமைகள் எனச் சில குறிப்பிடப்பட்டுள் ளன.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு
ஐம்புலத்து ஆறு ஓம்பல்தலை"

என்கிறார் வள்ளுவர் பெருமான்.

தென்புலத்தார் என்பவர்கள் பிதிர்கள், அதாவது பிதிரர், தெய்வங்கள், விருந்தினர்கள், சுற்றத்தவர்கள், தான் ஆகிய ஐந்து தரப்பினருக்கும் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தவறக் கூடாது. மாதா, பிதா, குரு, தெய்வம், அரசன் ஆகியோருக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் ஒழுங்காகச் செய்தல் அவசியமாகும். இக் கடமைகளைச் செவ்வையாகச் செய்துவந்தால் வாழ்வில் தாழ்வு ஏற்படாது.

நல்ல அறவழியில் பொருள் ஈட்டித் தன்னையும் பேணிப் பிறருக்கும் உதவிசெய்து வாழ்வதே அறவாழ்வு ஆகும். தெய்வவழிபாடு, தெய்வத் தொண்டு, யாத்திரை மேற்கொள்ளல், அடியார்களுக்குத் தொண்டு செய்தல், சமூகத் தொண்டுகள் புரிதல், நலிந்தோர் ஊனமுற்றோருக்கு உதவுதல் என்பவற்றில் உழைத்த பணத்தில் ஒரு பகுதியைச் செலவுசெய்தல் அறமாகும். சமய வாழ்வு என்பது தருமவாழ்வு, நீதியான வாழ்வு, அன்பு வாழ்வு என்பவற்றை உணர்வோமாக.

## உலகத்தார் உள்ளத்தில் இடம்பிடித்தோன்

வெள்ளையர் ஆட்சியை அகற்றி
விடுதலை பெற்றுத் தந்த மகான்
உள்ளத்திற் பொய்யா தொழுகி
உலகத்தார் உள்ளத்தில் இடமே பிடித்தோன்
கொள்கையில் உறுதி பூண்டு
கொண்டுதன் அறப்போர் நடாத்திய அண்ணல்
தள்ளாத வயதிலும் நாட்டுக்காய்த்
தளராது உழைத்த தனிப்பெரும் தலைவன்

*கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்.*

உ

# மனம் என்னும் ஆறாம் அறிவு

**திரு நா. நல்லதம்பி அவர்கள்**

மனம் என்னும் ஆறாம் அறிவைப் பெற்றவன் மனிதன். இதனாற்றான், மனிதன், ஏனைய உயிரினங்களிலும் பார்க்க மிக உயர்ந்தவனாகக் கொள்ளப்பெறுகிறான். அந்த ஆறாம் அறிவு 'மனம்' என்று தொல்காப்பியம் இவ்வாறு கூறுகின்றது.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அவற்றொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐயறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே (தொல்காப்பியம்)

அதாவது புல், பூண்டு, மரம், செடி என்பன பரிச உணர்ச்சி என்னும் ஓரறிவை மாத்திரம் பெற்றுள்ளன; சங்கு, சிப்பி, நத்தை முதலியன பரிச உணர்வோடு சுவையையும் பெற்றுள்ளன. கறையான், எறும்பு என்பன பரிச உணர்வு, சுவை என்பவற்றோடு மோப்ப சக்தியையும் பெற்றுள்ளன. நண்டு போன்றவை பரிசம், சுவை, மோப்பம் ஆகியவற்றோடு ஒளி (பார்வை)யையும் பெற்றுள்ளன. விலங்குகள் பரிசம், சுவை, மோப்பம், ஒளி என்பவற்றோடு ஓசை ஆகிய அறிவையும் பெற்றுள்ளன. மனிதன் பரிசம், சுவை, மணம், ஒளி, ஓசை என்னும் ஐம்புல அறிவோடு மனம் என்ற ஆறாவது அறிவையும் பெற்றிருக்கிறான் என்று வகைப்படுத்திக் கூறப்பெற்றிருக்கிறது.

இந்த மனம் என்னும் ஆறாம் அறிவு பெற்ற மனிதப்பிறவி அரிய பிறவி என்கிறார் ஔவையார்.

அரியது கேட்கின் தனிநெடு வேலோய்!
அரிது அரிது மானுடர் ஆதல் அரிது; அதனினும்
கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்,
ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது,
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்,
தானமுந் தவமும் தான் செய்தல் அரிது;
தானமுந் தவமுந் தான் செய்வராயின்,
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

என்று, அரியது எது? என்று கேட்ட முருகப்பெருமானுக்கு ஔவையார் சொன்னதாக ஒரு பாடல் உண்டு.

இதிலே அரிய பிறவி மனிதப் பிறவி என்று சொல்லவந்த ஔவையார், அப்பிறவி பெற்ற மனிதன், ஞானம், கல்வி, தானம், தவம் என்ற படிகளில் உயர்ந்து சென்றால், வானவர் வாழ்க்கை

கிடைத்துவிடும் என்கிறார்.

இதுபோலவே, ஆறுமுகநாவலர் அவர்களும், "இறைவன் நமக்கு மனிதப் பிறவி அளித்ததன் நோக்கம், அவனருளாலே அவன்தாள் வணங்கி முத்தியின் பம் பெரும் பொருட்டேயாம்" என்று கூறியிருத்தல் காணலாம்.

மனிதன், பெறுதற்கரிய இப்பிறவியைப் பெற்றாலும் தொடர்ந்து பிறப்பதும் இறப்பதுமாக இருக்காமல், பேரின்ப நிலையான வீடுபேறு அடைய முயற்சிக்க வேண்டும் என்பதுதான் நமது சைவ சமயத்தின் முடிந்தமுடிபு ஆகும்.

இனி இந்த ஆறாம் அறிவான மனம் படைத்தவர்களது தன்மைகள் எப்படி என்று பார்ப்போம். மனம் படைத்த மனிதர் எல்லோரும் ஒரே விதமாக இருப்பதில்லை என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இதுதான் உலகநியதியாக இருக்கிறது என்று காட்டுகின்றார் திருவள்ளுவர்.

மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல் (குறள் 453)

என்பது தெய்வப்புலவரது கூற்றாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் மனத்தில் ஒரு உணர்ச்சி இருக்கும்; இவன் இப்படியானவன் என்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல் அவனது இனங் காரணமாக அவனது மனத்தில் பதிவாகியிருக்கும். இது ஒரு மனிதன் செய்யும் நன்மை தீமை இரண்டிற்கும் பொருந்தும் என்கிறார்.

மேலும் ஒருவனது மனம் தூய்மையானதாக, உண்மையானதாக இருந்துவிட்டால், அது அவனது சொந்த வாழ்க்கைக்கும் இந்த உலகத்துக்கும் நன்மை பயப்பதாக இருக்கும். அத்துடன் அவனது இனமுந் தூய்மையானதாக இருந்துவிட்டால் அதிகம் நன்மை உண்டாகும் என்கிறார். பொதுவாக இனம் நல்லதாக இருந்தால், அந்த இனத்தவனது மனமும் நன்றாகவே இருக்கும் என்று கொள்ளலாம். அப்போது,

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழுந் தரும் (குறள் 457) என்கிறார் திருவள்ளுவர்.

இனி, மனம் படைத்த ஒருவனது மனமும் சொல்லும் செயலும் நல்லனவாக இருந்தால் அவனை நல்லவன் என்றும், மனம்வேறு, சொல்வேறு, செயல் வேறாக இருந்தால் அவன் நல்லவனல்லன் என்றும் உலகம் சொல்லும்.

ஆக, மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் எவனொருவன் தூயவனாக வாழ்கிறானோ அவனையே இந்த உலகம் விரும்புகிறது. அந்தவிதமான வாழ்வே அறநெறி வாழ்க்கை; வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை; நமக்கு உயர்வு தரும் வாழ்க்கை. இதனைத் திருவள்ளுவர்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும் (குறள் 50) என்று குறிப்பிடுகின்றார்.

இந்த அறிநெறி வாழ்க்கை முறையே சைவநெறி முறையும் ஆகும்.

மனம், வாக்கு, காயம் என்பவற்றில் தூய்மையிருந்தால் உலகம் நம்மை மதிக்கும்; வாழ்வு சிறக்கும். தீமை மிகுந்தால் உலகம் மதிக்காது; வாழ்வு துன்பமயமாகும்.

மனத்தளவிலே ஒருவன், பொறாமை, ஆசை, பகைமை, கோபம் முதலிய உடையவனாக இருக்கக் கூடாது. இத்தகைய உணர்வுகள் ஏற்படாமல் சிவசிந்தனையில் மனத்தைச் செலுத்தவேண்டும்.

சொற்குற்றமாக, பொய்கூறல், புறங்கூறல், தீயனகூறல் இல்லாமல் நடந்துகொள்ளல் வேண்டும். சிவநாமத்தை உச்சரித்துச் சொல்லால் வரும் குற்றத்தை நீக்க வேண்டும். கொலை, களவு, பிறர்மனை நயத்தல் முதலிய உடம்பாற் செய்யும் தீவினைகளை நீக்க எப்பொழுதும் சிவதொண்டிலே தன்னை ஈடுபடுத்தி ஒருவன் வாழப்பழகிக்கொள்ள வேண்டும். ஆகவே நாம் எப்பொழுதும்,

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சரணடைந்து வாழ்வதே நமக்கு நன்மையாய் அமையும்.

திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகுமாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்

திருநாவுக்கரசர், தமது மனத்துக்குப் பின்வருமாறு கட்டளையிடுகின்றார்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலு மெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந் தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலை புனல் சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே (தேவாரம்)

என்று நெஞ்சத்துக்கு இடுகின்ற வேண்டுதலிலே, நெஞ்சம் (மனம்) மாத்திரமன்றிச் சொல்லும் செயலுஞ் சேர்ந்த முக்கரணங்களுக்கும் அவைகள் ஆற்ற வேண்டிய பணிகளையும் சொல்லுகின்றார். மனம் அதுபோன போக்கிலே போக விடாமல் நன்மை பயக்கும் என்று, தான் சிந்தித்த வழியிலேதான் சிந்தனையும் சொல்லும் செயலும் தொழிற்பட வேண்டும் என்று முடிபெடுக்கின்றார்.

மேலும் அவர் பாடிய திருவங்கமாலையில் ஐம்பொறிகளையும் ஐம்புலன்களையும் தமது சிந்தனையால் நெறிப்படுத்துவது நமக்கும் பாடம் புகட்டவேயாகும்.

தலையே நீ வணங்காய்; நெஞ்சே நீ நினையாய், கண்காள் காண்மின்களோ, வாயே வாழ்த்துகண்டாய், மூக்கே நீ முகராய், செவிகாள் கேண்மின்களோ, கைகாள் கூப்பித் தொழீர், கால்களாற் பயனென், யாக்கையாற் பயனென்- என்றெல்லாம் ஆற்றுப்படுத்தும் ஆத்ம ஞானத்தை அப்பரிடமிருந்து நாம் அறிகிறோம்.

இனி, மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாய் இருப்பவை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கும் ஆகும். இதனை உலகப் பொதுமறை தந்த வள்ளுவன் வழியில் நின்று பார்ப்போமாயின், நாம் அறவழியில் பொருள்தேடி வாழ்ந்து இன்பம் பெற்றுப் பின் பேரின்பமான வீடுபேறு அடைய வேண்டும் என அவர் கூறியுள்ளமையை அறிந்து கொள்ளலாம்.

இங்கே, அறநெறி வாழ்க்கைக்கு முக்கியமான சாதனமாக விளங்குவது நமது மனம் என்றே தெய்வப்புலவர் குறிப்பிடுகின்றார்.

மனத்துக் கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்
ஆகுல நீர பிற (குறள் 34)

என்பது அவர் கூறும் மிக முக்கியமான பாடல் ஆகும். ஒருவனது மனம் குற்றமற்றதாக இருக்கவேண்டும்; அப்பொழுதே அறவினைசெய்தல் முடிந்த காரியமாகிவிடும். ஏனைய வாய்ப்பு வசதிகள் எல்லாம் வீணான ஆரவாரங்கள் என்பது அவரது கருத்தாக இருக்கிறது!

மனந் தூய்மையாக இருந்தால், சொல்லும் செயலும் நன்றாக அறநெறிப் பட்டனவாக அமையும் என்பது அவரது முடிபு. "அறஞ் செய்ய விரும்பு" என்று ஒளவையார் சொன்னதுவும் இதுதான். ஒருவனது மனம் விரும்பாத ஒன்றை அவன் செய்வான் என்று எப்படிக்கூறலாம்? 'அறஞ்செய்' என்று சொன்னால் செய்வான் என்று எப்படி நம்புவது? அறஞ் செய விரும்பு என்று அவனது மனத்தை வழிப்படுத்துகிறார் ஒளவையார்.

மனம் தூயவழியிற் செல்வதற்கு நல்ல கல்வியும் கடவுள் பக்தியும் நமக்கு அவசியமாகின்றன. 'வைத்ததொரு கல்வி, மனப் பழக்கம்' என்பார்கள். கல்வி அறிவுபெற மனத்தை பழக்கப்படுத்த வேண்டும்.

கரை காணமுடியாத கல்விக் கடலிலே நமது வாழ்க்கைக்கு உதவக் கூடிய நல்ல நூல்களைத் தேடிக் கற்க வேண்டும். கற்பவற்றை ஐயந்திரிபறக் கற்க வேண்டும்; கற்ற வழியில் ஒழுக வேண்டும்.

கற்கக் கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக (குறள் 391) என்கிறார் செந்நாப் போதார்.

நமது மனத்திலிருந்து வெளிப்படுகின்ற சிந்தனையானது கல்வி அறிவோடு கலந்தாற்றான் அதனை உலகம் வரவேற்கும்; அது நமக்கும் நாட்டுக்கும் நல்ல பலனைத் தரும்.

அதுபோலவே, நமது மனத்திலிருந்து வெளிப்படுகின்ற சொல் குற்றமற்ற சொல்லாக, பயனுள்ள சொல்லாக, இன்சொல்லாக இருக்கவேண்டியது அவசியம்.

(தொடரும்...

# நக்கீரர் அருளிய நன்முருகாற்றுப்படை
# பழமுதிர்ச்சோலை மலை நின்ற பெருமான்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

நக்கீரர் தாம் உரைத்த நன்முரு காற்றுப்படையிலே இறுதியாகச் சோலை மலையை ஒரு படைவீடாகக் கொண்டுள்ளார். கருதரியசோலைமலை பசுஞ் சோலை. இயற்கை வனப்பு மிக்கது பழம் உதிர்சோலை, பழமுதிர்ச்சோலை மதுரைக்கு வடக்கேயுள்ள அழகர் மலையாகும். சோலைமலை என்றும், திருமாலிருஞ் சோலைமலை என்றும், இருங்குன்றம் என்றும் வழங்கப்படுகிறது. பழம்+ உதிர்+ சோலை எனப்பிரித்து பழம்உதிர் சோலைகளையுடைய மலை எனவும் கூறுவர். பண்டைக்காலத்தில் இங்கே முருகன் கோயிலும், திருமால் கோயிலும் ஒருங்கே இருந்து சைவ, வைஸ்ணவ ஒற்றுமையைப் புலப்படுத்தியிருக்கும். திருமால் மலையடிவாரத்திலும், முருகன் மலையின்மீதும் எழுந்தருளி அருள்பாலிக்கின்றனர். ஆதிகாலத்தில் பழமுதிர் சோலை ஆலயம் அமைக்கப்பட்ட இடத்தில் வேலைச் சிலைவடிவமாக வைத்து வணங்கியிருக்கிறார்கள்.

தமிழ்மூதாட்டி ஔவையார் மதுரைக்குச் செல்லும் வழியில் நெடுந்தூரம் நடந்து பசியினால் களைத்துப் போய் ஒரு நாவல் மரத்தின்கீழே களைப்பாறுகிறார். முருகப்பெருமான் மாட்டுக்காரச் சிறுவனைப்போல் நாவல் மரத்தின் மேலே அமர்ந்திருந்தார். ஔவையாரின் பசியைப்போக்க எண்ணிய சிறுவன் "பாட்டீ! நாவற்பழங்கள் வேண்டுமா? எனப் பரிவுடன் கேட்டான். தமிழ்மூதாட்டியும் சிறுவனுடைய இனியமொழியைக் கேட்டு மகிழ்ந்து, நாவற்பழம் வேண்டுமெனக் கூறவே, சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று சிறுவன் கேட்டான். திகைத்துவிட்ட ஔவையார் சுட்ட பழம் போடு என்றார். சிறுவன் மரக்கிளையை நன்றாகக் குலுக்கவே கனிந்த பழங்கள் மண்ணில் வீழ்ந்து மணல் ஒட்டிக்கொண்டது. கீழே விழுந்த பழங்களில் ஒட்டிய மணலைப்போக்க அவற்றை எடுத்து வாயால் ஊதினார். "பாட்டீ! பழங்கள் நன்றாகச் சுடுகின்றனவா? என்று சிறுவன் கேட்கவே, ஔவையார் தன் அறிவின் சிறுமையை எண்ணிக் கலங்கினார். ஔவையார்மூலம் உலக மக்களுக்குப் பலநீதிகளை எடுத்துக்கூறத் திருவுளங்கொண்ட முருகனும், வருந்தி நின்ற ஔவையாருக்குத் தன் சுயவடிவைக் காட்டிச் சில வினாக்களைக் கேட்டுப் பதில் கூறவைத்துவிடுகிறார். ஞானத்தாயாகிய தமிழ்க்கிழவியோடு, ஞானபண்டிதனாகிய தமிழ்க் குழவி நடாத்திய திருவிளையாடல் இது. முருகன் பழங்களை உதிர்த்ததால் பழமுதிர்சோலை என்று அன்றுதொட்டு வழங்கிவருகிறது.

மலையின் உச்சியில் சிறிய கிளைகளாக ஆரம்பித்த அருவி வரும் வழியில் ஒன்றுசேர்ந்து பேரருவியாகிக் கீழ்நோக்கிப் பாய்கின்றது. பெருந்தாரையாகி வேகம்பெற்று வரும்போது அகிற்கட்டைகளையும் சுமந்துகொண்டு சந்தன மரங்களை வேரோடு பெயர்த்தும், தேன் கூடுகளைச் சிதைத்துக்கொண்டும் பாயத்

தொடங்குகிறது. பழுத்துவெடித்த பலாப்பழங்களிலிருந்து உதிர்ந்து விழும் பலாச்சுளைகளும் அருவியுடன் கலக்கின்றன. பெரிய ஆண்யானைகளின் முத்தையுடைய வெண்மையான தந்தங்களை வாரிக்கொண்டுவரும் அருவி வாழைமரங்களை முறித்துக்கொண்டும், இளநீர்க்குலைகளை உதிர்த்துக்கொண்டும் வருகின்றது. பறவைகளும், மிருகங்களும் அருவி விழும் ஓசையைக்கேட்டு அஞ்சி ஓடுகின்றன. காட்டுக்காளைகள் முழுங்குகின்றன. மலைஉச்சியிலிருந்து கீழ்நோக்கிவரும் அருவியின் ஓசை இடையீடு இல்லாமல் இழும் என முழுங்கிக்கொண்டேயிருக்கிறது என்று நக்கீரர் கூறுகிறார். இத்தகைய இயற்கை நலம் பெற்ற பழமுதிர்சோலைமலைக்குத் தலைவனாக இருப்பவன் முருகனே என்றும், அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் பல்வேறு இடங்களையும், அவனது திருநாமங்களையும், அவனை வழிபடும் முறையையும் விளக்குகிறார்.

முருகன் வழிபாடு மிகமிகப் பழங்காலந்தொட்டே நிலவிவருவதாகத் திருமுருகாற்றுப்படைமூலம் அறியமுடிகிறது. ஊர்தோறும் முருகனுக்கு விழா எடுப்பார்கள். குறிஞ்சிநிலக்குமரன் முன்னிலையில் கூடைநிறைய தினை அரிசியை விடுபூக்களுடன் கலந்து வைத்து வழிபடுவார்கள். அதன்பின் ஆட்டுக்கடாவை அறுத்துப் பலியிடுவார்கள். கோழிக்கொடியைக் கொம்பிலே கட்டி பெருவிழாவுக்கு அறிகுறியாக நிறுவுவார்கள். கோயிற்பூசாரி வேலன், பெருமானின் அருள்கொண்டு வெறியாடுகின்ற களத்தில் முருகன் எழுந்தருளுவான். அடியவர்களுடைய அன்புக்கு அடிமையாகி அருள்புரிவான் முருகன். அழகு பொலியும் இடங்கள் எல்லாம் அவர் திருத்தலங்கள் அங்கு எங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் முருகன் அவரவர் செய்கின்ற வழிபாடுகளை மனமார ஏற்று அருள்புரிவான். மலைக்கோயில்களில் குலப்பெண்கள் முருகனுக்கு விழா எடுக்கின்றனர். முதலில் சேவற்கொடியை ஏற்றி அலங்காரங்கள் செய்து முருகன் புகழ்பாடி வழிபாடு செய்கிறார்கள். நெய்யுடன் வெண்சிறுகடுகை அரைத்துக் கலந்து, ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்தவண்ணம் திருக்கோயிலில் விளங்குகின்றனர். விடுபூக்களைத் தூவுகிறார்கள். வெவ்வேறு நிறமுள்ள இரண்டு ஆடைகளை உள்ளொன்றும் புறமொன்றுமாக உடுத்துகிறார்கள். சிவந்த நூலினைக் கையிலே காப்பாகக் கட்டிக்கொள்கிறார்கள். கொழுத்த ஆட்டுக்கடாவை அறுத்து அதன் இரத்தத்துடன் வெண்மையான அரிசியைக் கலந்து முருகனுக்கு சிறு பலியாக இட்டுப் படையல் செய்கிறார்கள். பசுமஞ்சளை அரைத்துச் சந்தனத்துடன் கலந்து எங்கும் தெளிக்கிறார்கள். செவ்வலரி முதலிய மாலைகளைத் துண்டு துண்டாக அறுத்துச் சிறிதும் பெரிதுமாகத் தொங்கவிடுகிறார்கள். குறிஞ்சிப் பண்களைப் பாடிப் பல நிறப்பூக்களைத் தூவிக் குமரனைப் போற்றித் துதிக்கிறார்கள். இரத்தத்தோடு கலந்த சிவந்த தினையைப் பரப்புகிறார்கள். முருகனுக்கு விருப்பமான தொண்டகப்பறை, துடி முதலியவற்றை வாசிக்கிறார்கள். தங்குறை தீரவேண்டி ஊருக்கு நன்மை தரவேண்டி அவரவர் இயல்புக்கேற்ப வழிபட எல்லோருக்கும் முருகன் அருள் செய்கிறான். நானே இதனை உணர்ந்திருக்கிறேன். "இதை யாரோ சொல்லக்

கேட்டேன் என்று மட்டும் எண்ணாதே. நான் அறிந்தவாறு இது படைவீடுகளிலும், காவிலும், பூவிலும், காட்டிலும் கவின் பெறுமலையிலும் விழாவிலும், வேலன் வெறியாடு களத்திலும், முனிவர் உள்ளத்திலும், குறமகள் பூசையிலும் அழகனாகவும், அறிஞனாகவும் வீரனாகவும் தெய்வமாகவும் அவன் எழுந்தருளியிருப்பது வியப்பாக இருக்கலாம். முருகன் சாந்நித்தியத்தின் பெருமையும் உண்மையும் இதுதான்! இந்த இடங்களில் எந்த இடமாக இருந்தாலும் நீ உள்ளன்போடு சென்றால், அங்கே முருகனைக் காணலாம். உனக்கு எது அணுகும் நிலையில் இருக்கிறதோ, எங்கே திருவருள் கூட்டுவிக்கிறதோ, காடு என்றும் மலை என்றும் பாராதே. அங்கேபோ. அவன் எந்த இடத்தில் இருந்தாலும் நீ அவனை நேரில் காணும்போது இனிய முகத்தோடு கையைத் தலைமேற் குவித்து வணங்கி அவன் பாதகமலங்கள் உன் தலையில் உறுமாறு வணங்கி வாழ்த்துவாயாக.

குழவியே! மைந்தரேறே! புலவரேறே! நூலறிபுலவ! புரையுநர் இல்லாப் புலமையோனே! மலைமகள் மகனே! இன்ப அழகனே! என்று உனக்குத்தெரிந்த சொற்களால் வாயாரப்புகழ்ந்து துதிக்கலாம். தேவர்க்கு மட்டும் அருள்செய்பவன் அல்லன். அவனோ வேண்டுவார் வேண்டுவதை ஈயும் வள்ளல் தன்னை நாடிவரும் யாவருக்கும் நிச்சயம் அருள்புரிவான். முருகன், வள்ளி, தெய்வானைக்கு நாயகனாக இருந்து காதல் ஒழுக்கத்தையும் இன்ப விளைவையும் உலகுக்கு அருள் செய்கிறான். வீரம் மிக்காருள் ஆண் சிங்கமாகவும் விளங்குகின்றான். 'மங்கையர் கணவ, மைந்தர்ஏறே" எனத் திருமுருகாற்றுப்படை வாழ்த்துவதிலிருந்து அகவாழ்வும், புறவாழ்வும் நமக்குத் தெரிந்துவிடுகின்றன. செருவில் ஒருவ, பொருவிறல் மள்ள' என்று நக்கீரர் பாடுகிறார். பெரும்பெயர் முருகன் அகத்தையும் புறத்தையும் காட்டித்தரும் அற்புதத் தெய்வம் 'அப்பனே' நின்னை அளவிட்டறிதல் சிற்றறிவும் சிறிய ஆற்றலுமுடைய உயிர்களுக்கு அரிது. நின்திருவடியை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தோடு வந்திருக்கின்றேன் என்று மட்டும் சொல்லி விட்டாற் போதும்! எண்ணியதை எல்லாம் தன் உள்ளத்திலே குறித்தவனாகப் பெருமான் தோன்றுவான். அடியார்களுக்கு அருள் செய்ய எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறான். அணுக்கத் தொண்டர்களே எம்முடைய வரவு தெரிவித்து விண்ணப்பித்துக்கொள்வார்கள். விண்ணப்பித்துக் கொள்பவர்களும் பலர் இருப்பார்கள். இந்த இரவலன் நல்ல பாத்திரம். முருகா! நீ பேரருளாளன் என்ற புகழை எல்லாம் கேட்டிருக்கிறான். இனிய நல்லபலகூறி நின்னைத் தோத்திரம் செய்தபடி வந்திருக்கிறான்" என்று வருகையை முருகனுக்கு உரைப்பார்கள். அப்பொழுது முருகன் திருவருள் பெருகும். "நம்முடைய விசுபருபத்தைக் காணும் பக்குவம் இவனுக்கில்லை" என்று பேருருவத்தை முருகன் மறைத்து, மனமும் தெய்வத்தன்மையும் இளமையும் அழகும் ஒருங்கே அமைந்த பழைய திருவுருவத்துடன் வந்து தரிசனம் தருவான். மேலும் அவன், "பயப்படாதே, நீ வருவாய் என்பதனை நாம் அறிவோம்" என்று ஆறுதல் வார்த்தையும் சொல்லி, இந்த உலகத்திலே எல்லோரிலும் மேம்பட்டுத் தோன்றும்படியாக எல்லாவற்றிலும் சிறந்ததென்று போற்றப்படுவதும், பெறுதற்கரியதுமாகிய வீட்டின்பம் எனும் மரணமில்லாப் பெருவாழ்வு என்னும் பரிசிலை

அறிவின்மை இழிவானது அதைவிட இழிவு அறிய மனமில்லாமை.

அவன் அருளுவான். அவன்தான் பழமுதிர் சோலைமலைக் கிழவோன் என்று உறுதியாகக் கூறி நன்முருகாற்றுப் படையை நக்கீரர் நிறைவுசெய்கிறார். பழமுதிர்சோலையைப் பாடும்போது நக்கீரர் முருகன் துதிகளைப் பாடியவாறு நாமும் அந்த ஆல்கெழுகடவுட்புதல்வன், பார்வதி குமாரன், சத்துரு சங்காரன், வானோர் வணங்குவில்தானைத் தலைவன், மாலை மார்பன், நூலறிபுலவன், வேற்செல்வன், குறிஞ்சிக்கிழவன், முத்திச்செல்வ முருகன், பெருங்கடவுள், ஒப்பற்றவீரன் அந்த பழமுதிர்சோலைக் கிழவோனின் பெருமைகளைப்போற்றி, அவன் சரண கமலங்களைப்பணிந்து, அவனருளும் பெறலரும் பரிசாகிய வீட்டின்பத்தினைப் பெறுவோமாக.

(தொடரும்...

(தொடர்ச்சி....

**2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| தி. துவாரகேஸ்வரன் ஈஸ்வரன் றேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| திரு மூர்த்தி அன்னை நாகா பூட் சிற்றி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| காசி மகேந்திரம் | வல்வெட்டி | 10000. 00 |
| உஷா பல்பொருள் வாணிபம் | | 2புட்டி அரிசி |
| ஞா. ரமணன் | கந்தரோடை | 1000. 00 |
| நகுலன் அழகம்மா | தொண்டைமானாறு | 1மூடை அரிசி |
| கலாபூஷணம் வ. செல்லத்துரை | அச்சுவேலி | 1000. 00 |
| சி. விமலன் நவக்கிரி | புத்தூர் | 5000. 00 |
| ச. கண்ணன் | வல்வெட்டித்துறை | 4000. 00 |
| உதயன் யமுனா | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| வைரமுத்து கெங்கா | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| T. கலாநிதி | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| பா. பாலேந்திரம் | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| திரு குமாரகுலசிங்கம் | பிரான்ஸ் | 5000. 00 |
| S. கிருஸ்ணானந்தம் மூலம் க. நாகரெத்தினம் கன்னாதிட்டி | இலுப்பைக்கடவை | 10000. 00 |
| ஆதவன் மில் | அச்சுவேலி | 1மூடை அரிசி மரக்கறி |
| அமரர் இ. சிவலிங்கம் ஞாபகமாக | | 5000. 00 |
| ஜெகா மோட்டோர்ஸ் | வல்வெட்டி 1மூடை அரிசி | 2000. 00 |
| சின்னப்பு ரமேஸ் நாவலடி | உடுப்பிட்டி | 1மூடை அரிசி |
| தனபாலன் குகன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ச. குமாரசாமி | சுழிபுரம் | 500. 00 |
| மீனலோசினி | மல்லாகம் | 1000. 00 |
| K. சிவலோகநாதன் | நீர்வேலி மத்தி | 3000. 00 |

(தொடரும்....

# கலையானது மனிதனை முழுமையாக்க வல்லது. இயற்கையோடு இயைந்தது கலை. வாழ்விற்கு வழிகாட்டியும் அதுவே!

செல்வி சர்மிலா சரவணமுத்து அவர்கள்

'கலை' என்ற சொல் செயலாற்றலைக் காட்டுவது. அழகை மிளிரச் செய்வது சுவை பயக்கவல்லது. பற்பல காரணகாரியங்களுக்கு உதவுவது என்றும் அறிவையும், ஆற்றலையும் மனப்பாங்கையும் கூட்டாக வெளிப்படுத்துவது என்றும் கருதப்படுகிறது. ஆகையால் கலையில் செயல், பயம், திறமை, அழகு, சுவை என்ற அம்சங்கள் உள்ளன எனக் கொள்ளலாம். இவற்றில் பயன்பாடு அதிகப்படுமானால் அக்கலை பெறுபேறு உடையது அல்லது அடையத்தக்கது எனலாம். அழகின் வெளிப்பாடை மட்டுமே நோக்கமாகக் கையாளப்படும் கலைகள் அழகுக் கலைகளாகக் கருதப்படும். நாகரிகம், பண்பாடு என்று சொல்லப்படுபவையெல்லாம் கலைகளினாலேயே ஏற்பட்டனவாகும்.

"கலையானது தன்னலமும், பழிபாவங்களும் நிறைந்த உலகைவிட்டு எம்மை அப்பால் அழைத்துச்செல்ல வல்லது" என்றார் இரவீந்திரநாத் தாகூர். இக்கூற்று கலைகளுக்கு முற்றிலும் பொருந்தும். கலைஞன் ஆன்மாவின் உண்மையைப் பலதிறப்பட்ட கலைகளிலும், ஒலி, நிறம், கைவண்ணம், நடிப்பு என்பவை மூலமும் காட்ட முயல்கிறான். சிறந்த கலைஞன் தான் படைக்கும் பொருளைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கிறான். படைப்புப் பொருளில் தன் மனத்தை நிலைநிறுத்துகிறான். வேறெந்த எண்ணமும் அவனிடத்தில் தோன்றுவதில்லை. அவனது உள்மனமும் அதில் படிந்த உருவமுமே உண்மையான கலையாக வெளிப்படுகிறது. கலைஞனும் கலையும் ஒன்றித்து வெளிப்படும் உருப்படிகளே என்றும் நின்று நிலைக்கும் தன்மையுடையன. உலகப்பொருட்களாற் காணப்படும் உண்மைகளை உள்ளார்ந்த உள்ளொளியுடன் புரிந்துகொண்டு நினைவில் இருத்திவைத்துப் பழகியவனே மனத்திரையில் படிந்த காட்சியை கலையுருவமாக வெளிக்கொணர்ந்து தெய்வத்திற்கு அதனை அர்ப்பணமாக்குவான்.

காணும் காட்சிகள் மட்டுமன்றிக் கேட்கும் ஓசைகளையும் பண்களையும், தாளத்தையும், குரலையும் நினைவில் இருத்தி ஆழ்ந்த சிந்தனையில் அவற்றை நெறிப்படுத்தி வெளிப்படுத்தும் கலைகளே தெய்வீகக் கலைகளாகின்றன. இவையெல்லாவற்றிற்கும் மேலாக கலைஞன் ஒழுக்கத்தை உயிர்நாடும் மேலாக நம்பிக்கை, சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு, அகிம்சை எனப்படும் மனித விழுமியங்களில் மேலோங்கி நிற்றல் வேண்டும். அப்போதுதான் உண்மையான அவன் நேசிக்கும் கலை அவனுக்கும் அவனுடைய ஆற்றலுக்கும் விழுப்பம் தருவதாக அமையும்.

கலையில் எப்போதும் ஆக்குவோன் ஒருவனும், ஆக்கப்படும்

பொருள் ஒன்றும் இருக்கும். ஆக்குவோனது செயலும் ஆக்கப்படும் பொருளின் தன்மையும். இவை இரண்டுக்குமுள்ள தொடர்பும் தனித்தன்மை வாய்ந்தவை. ஆக்குவோனின் கற்பனையில் தோன்றும் காட்சியின் வெளிப்பாடே ஆக்கப்படும் பொருளாகும். எனவே கலைப்படைப்புக்கள் உண்மையானவையுமல்ல பொய்யானவையுமல்ல எனக்கொள்ளலாம். அதாவது உண்மையா பொய்யா என்ற கேள்விக்கு இடமளிக்காத பொருள் அது. கற்பனைக்கும் சிந்தனைக்கும் வேறுபாடுண்டு. ஒன்றைப் பற்றிச் சிந்திக்கும்போது அது உண்மையா பொய்யா, சரியா, தப்பா, நல்லதா, தீயதா என்று பிரித்தறிந்து பார்க்கின்றோம். கற்பனைக்கு இந்தப் பாகுபாடு இல்லை. எனவே, கற்பனை ஒரு சிந்தனையன்று. சிந்தனைக்கு முன்னே கற்பனை தோன்றுகிறது. எனவே, சிந்தனையுள்ள செயல்களில் எல்லாம் கலை அடங்கியிருக்கும். ஆகவே, உண்மை அல்லாவிட்டாலும், உண்மையின் வெளிப்பாடு அல்லது தெய்வீகத்தின் தோற்றப்பாடே கலையென்ற முடிவிற்கு நாம் வரலாம். கலையின்பமே நிலையான இன்பம்.

"கலையே வாழ்வின் வழிகாட்டும் ஒளிப்பந்தம்" என்றார் ஆஸ்கார் ஒயில்டு. ஆயகலைகள் அறுபத்துநான்காகும். இவற்றுள் இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், இலக்கியம் என்பன நுண்கலைகளாகும். இசை என்பது இயலுக்கும் நாடகத்திற்கும் இடையில் நின்று இயங்குவதாகும். குறிப்பாற்றலும் ஓசைநயமும் முதன்மையாக அமைய, காரண காரியத் தொடர்போடு பொருளினை உணர்த்தி செவிக்கும் உள்ளத்திற்கும் இன்பம் அளிப்பது இசை. நடனக் கலையைக் குறிக்கும் பழைமையான சொல் கூத்து ஆகும். ஆடற்கலையென்றும் கூறுவர். ஆடல், பாடல், அழகு மூன்றும் ஒன்றாக இக்கலையில் இணைந்திருக்கும் இக்கலை அன்பையும் பக்தியையும் அளிக்கவல்லதும், உணர்ச்சியையும் அழகையும் வெளிப்படுத்தவல்லதுமாகும். கண்ணிற்கு விருந்தாகவும் கருத்திற்கு இனியதாகவும், செவிக்கு உவகையூட்டுவதாகவும் மனக்கிளர்ச்சியை ஊட்டவல்லது. "நாடகம் உலக வாழ்க்கையின் படப்பிடிப்பாகும். மக்கட் சமுதாயத்தின் பழக்கவழக்கங்களை உள்ளவாறே எடுத்துக்கூறும் கலை உலகியலின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி" என்றார் சீசரோ. (Cicero) நாடகங்கள் கண், செவி, கருத்து மற்றும் புலன்களுக்குத் தூண்டுதலைத் தந்து மக்களைத் துலங்கச்செய்கின்றன. நாடகங்களை இசைநாடகம், நடன நாடகம், உரைநடை நாடகம், ஓரங்கநாடகம், மௌன நாடகம் என்றெல்லாம் பகுக்கலாம்.

சிற்பக்கலைமூலம் சிற்பிகள் உணர்வுபூர்வமான மனக்காட்சிகளையும், கருத்துக்களையும், உண்மைகளையும் சித்தரித்துக் காட்டுவர். இயற்கையோடு இசைந்து உறவாடி நெருங்கிநின்று அதன் சிறப்புக்களையும் இயக்கங்களையும் உணர்ந்து அவற்றால் அகத்தே தோன்றிய உணர்ச்சிகளை அழகும் பொலிவும் துலங்கத் தமது கைவண்ணத்தால் கல்லில் வடிவமைத்து செய்வர். இவர்களுடைய கைவண்ணங்கள் கல்லிலே கலைவண்ணங்களாக உருப்பெற்று வைத்தகண் வாங்காமல் பார்க்கக்கூடிய மெய்சிலிர்ப்பை உண்டாக்கி வியக்கவைக்கும் அச்சுப் பொறி வார்ப்புக்களாகவும், செதுக்கல் செய்தல் மூலமும் சிற்பங்கள் உருவாக்

கப்படும். ஓவியக்கலை மனிதன் குகை களில் வாழ்ந்தபோது தோற்றமெடுத்த தெனலாம். ஓய்வுநேரங்களில் குகைகளின் சுவர்களிலோ அல்லது பிற இடங்களிலோ அவன் வரைந்தும் கீறியும் கிறுக்கியும் ஓவியங்களை அமைத்தான். இவையும் மனிதனின் கைவண்ணத்தையும், கைத் திறனையும் வெளிப்படுத்திக் காட்சிக்கும் கருத்திற்கும் விருந்தளிப்பவையாகும். ஓவியனின் தூரிகையின் அசைவு அவன் கற்பனைகளை ஓவியத்தில் தீட்டுகின்றது.

இலக்கியக்கலை கலைகள் அனைத்திலும் சிறந்ததாகும். நெடுங் காலம் நின்று நிலைத்தும் புகழ்பரப்ப வல்லதும் இலக்கியக்கலையேயாகும். இது செய்யுள் வடிவமாகவும் உரைநடை வடிவமாகவும் அமையும் உலக வரலாற் றையே மாற்றியமைக்கும் ஆற்றல் இலக் கியக்கலைக்கு உண்டு. சமுதாயத்தின் விருப்பு, வெறுப்புக்களை மூலதனமாகக் கொண்டு அதனை வளர்த்துப் பண்படுத்து வதும் இலக்கியக் கலையேயாகும்.

இதுவரையும் கலைகளைப் பற்றி யும் குறிப்பாக நுண்கலைகளைப் பற்றி யும் பார்வையிட்டோம். நுண்கலைகளை இரசஞானப் (Aesthetic Studies) படிப்பு என்றும் அழைப்பர். மற்றைப் பாடப் பிரிவு களுக்கு இல்லாத சிறப்பு நுண்கலை களுக்கு இருப்பதைப் பலரும் வெளிப் படுத்தியுள்ளனர். கல்விஅறிவு கைவரப் பெருக மக்களும்கூட இயற்கையோடு இயைந்த வாழ்வில் ஆடியும், பாடியும், நடித்தும், உருவங்களை வடித்தும் தத் தமது வாழ்விற்கு மெருகும் மேம்பாடும் செய்தனர்.

எழில் அல்லது அழகினை உணர்ந்து சுவைத்தால் நமது மன உணர்ச்சிகள் மன எழுச்சிகள் அனுபவங் கள் மேலோங்கி நிற்கும். அழகினை இரசித்தல் என்பது உண்மையினை உணர்தல் அறக்கோட்பாடுகளைப் பின் பற்றி நடத்தல்போன்று ஆன்மாவின் சிறப்புமிக்க ஆர்வங்களில் ஒன்றாகும். கலைத்திறனை வளர்க்க வளர்க்கக் கலை ஞனின் மனம் கலையில் ஒன்றிக்கிறது. அதனால் அவன் கலையை மெருகூட்டி முழுமைபெற வைக்கிறான். அதேசமயம் அக்கலை அவனையும் அவனுடைய சுபாவங்களையும் நல்வழிப்படுத்தி அவ னிடம் மனிதநேயத்தை ஏற்படுத்துகின்றது. முழுமையையும் நிறைவையும் பெற உதவுகின்றது. பலகாலமாக நமது பாட சாலைகளில் அழகுணர்திறன் அல்லது கலைகளில் நாட்டம் போதியளவு அளிக் கப்படவில்லை.

ஏழுவயதுமுதல் பதினான்கு வயது வரையிலான பருவத்தினருக்கு அழகுணர்திறனின் வளர்ச்சிக்கான பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். இத்துறையில் மாணவனின் படைப்பாற்றல்களைத் தட்டி எழுப்ப வேண்டும். இதன் விளைவாகக் கலையுணர்வாற்றல் ஒரு பழக்கமாக அவர்களிடம் மிளிரும். இவ்வகையான பங்களிப்பு வாழ்க்கைத் தொல்லைகளை மறந்து உளநலம், உடல்நலம் பேண உதவுவதோடு மன எழுச்சிகள் தூய்மைப் படவும் உதவும். எனவே "வீடுதோறும் கலையின் விளக்கம்" துலங்குவதோடு கல்விச்சாலைகளில் அவை திருவும் பொலிவும் பெறவும் உழைப்போமாக!

உயர்ந்த மனிதனின் பிள்ளையாகப் பிறப்பது தற்செயலாக நிகழ்கிறது. உயர்ந்த மனிதனாக இறப்பது நம் கையில்தான் உள்ளது.

**பிரார்த்தனை என்பது கடவுளிடம் ஏதாவது கேட்பதல்ல, அது ஆன்மாவின் ஏக்கமாகும்.**

# திருவாசகம் உபநிடதசாரம்

## திரு இ. சாந்தகுமார் அவர்கள்

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் தனக்கும் இறைவனுக்குமிடையில் உள்ள தொடர்பினை இது எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

"சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவது
இனியே........." எனச்சுட்டிக்காட்டுகின்றார்.

ஆன்மாக்களுக்கு பற்றுக்கள், ஆசைகள் இருக்கும் வரையில் துன்பங்கள் வந்துகொண்டே இருக்கும். ஆனால் பரம்பொருட்பற்று ஒன்றே பரமனது கருணையைப் பெறுவதற்கும் பிறகு அவனிடத்தில் ஐக்கியமாவதற்கும் உள்ள உபாயமாகும். இச்சிந்தனையினை கைவல்கிய உபநிடதம்

"கர்மத்தினாலன்று மக்களைப் பெறுவதாலன்று
செல்வத்தாலன்று, தியானத்தினாலே பரம்பொருளை அடையலாம்"

எனக்கூறப்படுகின்றது. இந்தக் கருத்தினை வற்புறுத்தும் வகையிலே திருச்சதகப்பாடல்கள் பின்வருமாறு கூறுகின்றன.

"எய்தல் ஆவது என்று நின்னை
எம்பிரான் இவ் வச்சனென்று
உய்தல் ஆவது உன் கண் அன்றி
மற்று ஓர் உண்மை இன்மையின்" என விளக்குகின்றன.

ஆன்மாவின் தன்மை பற்றிக் கடோபநிடதம் பின்வருமாறு விளக்குகின்றது. "ஆன்மாவானது ஓசையில்லாதது, தொட்டுணர முடியாதது, உருவமில்லாதது, அழிவற்றது, அங்ஙனமே சுவையற்றது, எப்பொழுதும் இருப்பது, நாற்றமில்லாதது, தொடக்கமும் முடிவுமில்லாதது, மூலப்பிரகிருதிக்கு மேலானது, அசையாதது, அந்த ஆத்மனை அனுபூதியில் அடைகிறவன் மரணத்தின் வாயினின்று விடுதலையடைகிறான் என விளக்கப்படுகின்றது. இச்சிந்தனையோடு பொருந்தக்கூடிய சிந்தனையினை மாணிக்கவாசகர் நீத்தல் விண்ணப்பப் பாடலில் காணக்கூடியவாற்றினை நோக்கலாம்.

"மாறு பட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப
யான் உன்மணி மலர்ந்தாள்
வேறு பட்டேனை விடுதி கண்டாய்
வினையேன் மனத்தே" என்பதன்மூலம் கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள வேறுபட்ட தன்மையினைத் தெரிவிக்கின்றார்.

உபநிடதங்கள் ஆன்ம விடுதலைக்குரிய வழிமுறையினை எடுத்துக்கூறுகின்றன கடோபநிடதம் பேரறிஞர் தமது பேச்சை மனத்தில் ஒடுக்க வேண்டும். மனத்தைப் புத்தியில் ஒடுக்க வேண்டும். புத்தியை அகங்காரத்தில் ஒடுக்க வேண்டும். அகங்காரத்தை சுத்த சைதன்யத்தில் ஒடுக்கவேண்டும் என விளக்குகின்றது. இதே போன்ற கருத்தினை மாணிக்கவாசகர் யாத்திரை பத்து பாட்டு எமக்கு சான்று பகர்கின்றது.

"விடுமின் வெகுளி வேட்கை நோய்
மிக ஓர் காலம் இனி இல்லை......."

அதாவது நிலையற்ற இவ்வுலக வாழ்வு விரைவில் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆதலால் இதை வளர்க்கும், சினம், ஆசை, ஆகியவற்றை நீக்குங்கள்.

மனம் சுத்தம் என்றும், அசுத்தம் என்றும் இருவகையாகக் கூறப்பட்டுள்ளது. ஆசையில் நாட்டமுடையது அசுத்தம். ஆசையில்லாதது சுத்தம் என அம்ருதி பிந்துபநிடதம் கூறுகிறது. மனமே மனிதர்களின் பந்தத்திற்கும் மோஷத்திற்கும் காரணமாகிறது. இத்தகைய கருத்தினையே மாணிக்கவாசகர் ஆன்மாக்கள் ஆசையின் காரணமாகப் பல பிறவிகள் எடுக்கின்றன என சிறப்பாக கூறுகின்றார். இதனைப் பின்வரும் அடிகள் விளக்கிநிற்கின்றன.

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி....."
"அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி...."

என்ற அடிகள் பிறவியின் தன்மையினை எடுத்துக்காட்டுகின்றன.

உபநிடதத்தில் மறுபிறவிக் கோட்பாடு கூறப்படுகின்றது. ஒரு புல்லின் நுனியில் இருந்து மறு புல்லின் நுனிக்குப் புழு தாவுவதுபோல ஆன்மாவும் ஓர் உடலைவிட்டுப் பிறிதொரு உடலை சென்றடையும் எனக்கூறப்படுகின்றது. இத்தகைய கருத்தினை மாணிக்கவாசகர்,

"பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்......."

பிறவிகள் எல்லாவற்றுக்கும் மேலானது மனிதப்பிறவியாகும்.

அடியார் உடைய நிலை தெளிவாக உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது. ஆன்மாக்கள் சிறந்த புத்திக் கூர்மையுள்ளனவாக இருந்து இறைவனிடம் சில சந்தேகங்களைக்கேட்டு அதன்வழி இறைவனை அடையவேண்டும். இதனை மாணிக்கவாசகர் இன்னொருவகையில் கூறுகின்றார்.

"கரம் குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க"

என இறைவனை கரங்கள் கூப்பியும் சிரத்தினைத் தாழ்த்தியும் வணங்குதல் வேண்டும்.

பரமாத்மா இருந்த படியே எங்கும் செல்கின்றது. சயனித்தபடி எங்கும் போகின்றது. அந்த யோகியை இல்லானை, உள்ளானை என்போன்றோரைத் தவிர யார் அறிவார்? என்று கடோபநிடதம் கூறுகின்றது. இதனையே மாணிக்கவாசகர் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஓராதார் உள்ளத்து, ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே...."

என்பதன் ஊடாக தனது கருத்தினைத் தெளிவுபடுத்துகின்றார்.

ஆன்மாக்கள் சில இப்பிறவியில் இன்பத்தை அனுபவிக்கின்றன. (உலகியல்) சில ஆன்மாக்கள் இறைநாட்டம்கொண்டு இருக்கின்றன. இந்தச் சிந்தனை முண்டகோபநிடதம் இரண்டு பறவைகளினை அடியொட்டி மாணிக்கவாசகர்

"புகுவேன் கனதே நின்பாதம்

போற்றும் அடியார் உள் நின்று....." என்ற பதிகத்தின் ஊடாக விளக்குகின்றார்.

முத்திபற்றிக் கூறும் இடத்து கடோபநிடதம் ஆன்மா உள்ளத்தின் உள்ள முடிச்சுக்கள் யாவும் அகற்றப்பட்ட நிலையில் ஆன்மா இறைவனை அடையும் என்று கூறப்படுகின்றது. இந்தக் கருத்தினைத் துணைக்கொண்டு மாணிக்கவாசகர் முத்திபற்றிக்கூறுகின்றார்.

"முத்தி நெறி யறியாத
மூர்க்கரொடு முயல் வேனை......" என்ற அச்சோப்பதிகத்தின் ஊடாக எடுத்துக்காட்டுகின்றார்.

முத்திநிலையினை அடைவதற்கு அதாவது வீடுபேற்றினை அடைவதற்கு உபநிடதங்கள் பல வழிகளினைக் கூறியுள்ளன. ஓங்காரம், பஞ்சாட்சரம், தவம், விரதம், ஒழுக்கம், பணிவு, அன்பு, அறம், தியானம் என்பவற்றினைக் கூறியுள்ளது. இத்தகைய கருத்து மாணிக்கவாசகர் முத்திப்பேறு அடைவதற்கு அவசியமான காரணிகள் என்றார். உபநிடதத்தில் கூறப்பட்ட கருத்தோடு குருலிங்க, சங்கம வழிபாடு, சைவ நாற்பாதங்கள், நற்செயல்கள் எல்லாம் இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்களாகக் கூறப்படுகின்றன. மேற் கூறப்பட்ட விடயத்தினைக்கொண்டு மாணிக்கவாசகரது திருவாசகக் கருத்துக்கள் உபநிடதத்திற் கூறப்பட்ட கருத்தினை தழுவியனவாக எழுந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

பிரம்மம், ஆன்மா, உலகம், மறுபிறப்பு, கன்மம், முத்தி, முத்தியடைவதற்குரிய வழிகள் உபநிடதத்திலும் திருவாசகத்திலும் காணப்படுவதையும், உபநிடதக்கருத்துக்கள் திருவாசகத்திற்கு மட்டுமன்றி பிற்காலத்தில் எழுந்த தத்துவத்துறை வளர்ச்சிக்கு அடிகோலியதுடன் அவைதிக நெறிகளான சமணம், பௌத்தம், உலோகாயதம் போன்றவற்றின் மூலக்கருத்துக்கள் உபநிடதக் கருத்துக்களையே தாங்கி நிற்கின்றன. இந்து மதத்தின் தத்துவக்கூற்றின் ஆரம்ப இடம் உபநிடதமாகும். பல உபநிடதங்கள் நமக்குக் கிடைக்கப்பெறவில்லை. அவையும் கிடைக்கும் இடத்தில் பல அரிய கருத்துக்களை அறியமுடியும். ஆனாலும்கூட இன்று இந்து தத்துவத்தின் முடிமணியாகத் திகழ்வது உபநிடதம் எனலாம். (முற்றும்)

**நாற்பாத மருளும் முருகா!**

சரியை நெறியுணர் சந்நிதியில்
குடிகொண்டு அன்னதானக் கந்தனாய்க்
கிரியை நெறிக்குகந்த கீரிமலைத் தீர்த்தமாடும்
மாவை மணவாளக்கோல முருகா!
யோகநெறி மிளிர மிகு நல்லை
மாநகருறையும் அலங்காரக் கந்தா!
ஞான நெறியா யுருவான கர்ப்பூரக்
கந்தனாய்க் காட்சி தரும் கதிர்காமப் பெருமானே.

*திரு இராம ஜெயபாலன் அவர்கள்.*

இருட்டைச் சபித்துக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுங்கள்.

உ

# சரவணபவப் பத்து

செல்வன் தி. மயூரகிரி சர்மா அவர்கள்

விண்ணகச் செல்வமும் கல்வியும் வீரமும்
திண்ணமுறத் தந்தருளும் திருச்சொல்லை
மண்ணகத்திலே கண்டு மகிழ்ந்தேன்
விண்ணவர் விரும்பும் சரவணபவ எனும் நாமம் 1

தாயினும் சாலப் பரிந்து யாவும் தரும் பல
நோயினைக் குணஞ் செயும் எலாம் தரும்
தாயினும் மேலான சொல்லை நற்பயனால்
நாயினேன் கண்டேன் சரவணபவ நாமம் 2

வாடினேன் இடர்பலவாம் பூதலத்திலே
தேடினேன் பெருந் தெய்வமதனையே
கூடினேன் குமரன் திருத் தொண்டருடன்
நாடினேன் சரவணபவ எனும் நாமம் 3

தொல்லை மிகு பிறவித் துயர் களையும்
அல்லல் நீக்கும் அரும் பெருந் திருச்
சொல்லை கந்தச் செந்தமிழ்ப் பிரான்
நல்லருளால் கண்டேன் சரவணபவ நாமம் 4

சிந்தை குளிரச் செய்யும் சிறப்புடை
விந்தை பலபுரி வீரர் சொல்லை
முந்தை வினையறுக்கும் முருகனாம்
எந்தையாற் கண்டேன் சரவணபவ நாமம் 5

ஆளும் பேரரசரும் அடி வணங்கியே
நீளும் மாநிதி பெறும் செவ்வேளுடை
தோளும் தாளும் வணங்கியதாற் கண்டேன்
கோளும் வணங்கும் சரவணபவ நாமம் 6

சுற்றமாம் பாசம் நீக்கும் நம்
கொற்றவன் குமரன் காட்டிடவே
நற்றவத்தால் நான் கண்டேன்
பற்றறுக்கும் சரவணபவ நாமம் 7

முன்னைக்கும் முன்னவனாய் நின்றே
பின்னைக்கும் பின்னவனாய் விளங்கும்
மன்னவன் வள்ளி மணாளனருளால்
நான் கண்டேன் சரவணபவ நாமம் 8

அப்பன் மடியில் அன்புடன் வீற்றிருந்து
தப்பின்றிப் பிரணவப் பொருள் தந்தவன்
இப்பாரில் நீரகத்துறை வேலவன் எனச்
செப்புவித்தான் சரவணபவ நாமம் 9

நலம் தரும் நன்மையெலாம் தரும்
குலம் தரும் கூர்மதி தரும் பெரும்
நிலம் தரும் நீளும் செல்வம் தரும்
வலம் தனில் வள்ளியுடையான் நாமமே 10

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| சாம்பசிவம் சம்மாட்டி | நாகர்கோவில் | 2000. 00 |
| சு. கந்தையா (பலாலி) | ஆவரங்கால் | 1000. 00 |
| சி. சாந்தினி மயிலியதனை | தொண்டைமானாறு | 10000. 00 |
| வீ. சுந்தரலிங்கம் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| சி. கிருஸ்ணபிள்ளை J.P | ஆவரங்கால் | 1000. 00 |
| திருமதி மனோன்மணி சண்முகதாஸ் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| மு. கனகசபாபதி நாச்சிமார் கோவிலடி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| S.V. கதிரவேல் குடும்பம் | அச்சுவேலி | 1000. 00 |
| மு. சுஸ்ருதன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சிவலிங்கம் குருபரன் | கரணவாய்மத்தி | 2000. 00 |
| நளினி குமாரதாசன் | கந்தர்மடம் | 1000. 00 |
| வே. ஹரிதாஸ் (ஜடா) சவுதி | நெடியகாடு | 5750. 00 |
| நா. தம்பிராசா | மல்லாகம் | 2500. 00 |
| அஞ்சல் அதிபர் | சாவகச்சேரி | 1000. 00 |
| மு. கந்தசாமி | பன்னாலை | 2000. 00 |
| A. முகுந்தன் கமாஸ் அவெனியூ | கொழும்பு | 10000. 00 |
| R.V. கந்தசாமி J.P | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| இ. பரமேஸ்வரி மந்துவில் | கொடிகாமம் (அவுஸ்திரேலியா) | 2000. 00 |
| அருள் கொமினிக்கேசன் பிறவுண் றோட் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| லவன் ஞானகுரு | கொழும்பு | 4000. 00 |
| தர்மகுலசிங்கம் கவிதா புத்தூர் | நவக்கிரி | 5000. 00 |

(தொடரும்....

# காளமேகம் கவித்திறன்

## திரு வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

### நெருப்பை அணைத்தவள்

"புள்ளிருக்கும் வேளூர்" எனப் புகழ்பெற்று விளங்குகின்ற வைத்தீஸ்வரன் கோயிலுக்குச் சென்று பெருமானைத் தரிசித்தார் காளமேகம். அம்மையின் பாக மாயமர்ந்த நிலையினை நெஞ்சினில் நிறுத்திப் பாடிய பாடல் இது.

தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலே
தீத்தானு முன்றன் சிரிப்பிலே - தீத்தானுன்
மெய்யெலாம் புள்ளிருக்கும் வேளூரா உன்னையிந்தத்
தையலா ளெப்படிச் சேர்ந்தாள்?

புள்ளிருக்கு வேளூரிலே கோயில் கொண்டிருக்கின்ற பெருமானின் நெற்றிக் கண்ணிலே விளங்குவதும் நெருப்புத் தான். நின் திருக்கரத்திலே இருப்பதும் நெருப்புத்தான். திரிபுரம் எரித்த நின் சிரிப்பிலே எழுந்ததும் நெருப்புத்தான். நின் திருமேனி முழுவதுமே நெருப்பு மயமானது தான். இப்படி இருக்கவும், இந்தப் பெண் மணியான உமையம்மை நின்னை எப்படி விரும்பி வந்து அணைத்தாளோ? அது தான் எனக்கு வியப்பாயுள்ளது.

### எந்த வினை தீர்ப்பான்

வேளூர் வைத்திய நாதனைத் தரிசித்தபின் உட்புற வீதியினை வலம்வந்த காளமேகத்துக்கு, அனைவரதும் நோய் தீர்க்கும் புற்றுமண் கண்ணிற் படுகிறது. வினை தீர்க்கும் வேளூரானைப் புகழ்ந்து பாடுகிறார் அவர்.

வாதக்கா லாந்தமக்கு மைத்துனற்கு நீரிழிவாம்
பேதப் பெருவயிறாம் பிள்ளைதனக் - கோதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியார் வேளூரர்
எந்தவினை தீர்ப்பார் இவர்?

வேளூரரான சிவபெருமானுக்கு வாதக்கால். (கால் வாதம்: தொடர்ந்து நடனமிடும் திருவடிநிலை) அவர் மைத்துன ரான திருமாலுக்கு நீரிழிவுநோய் (நீர் இழிவு: பாற்கடலில் தொடர்ந்து துயில்பவராதலால்) அவர் பிள்ளைக்கு விகாரமான பெருவயிறு. (பேதப் பெருவயிறு: மாறுபாடான பருத்த தொந்தி - மகோதரம்) தனக்கும் தன்வீட்டுச் சொந்தக்காரர்களுக்கும் வந்திருக்கின்ற நோய்களையே தீர்க்க வகை தெரியாமல் இருக்கும் இவர், வேறு எந்த வினை தீர்க்கப்போகிறார்?

### குறமகளை மணந்தான்

முருகப்பெருமான் குறமகள் வள்ளியை மணந்ததால் கடவுளர் பலரும் வருத்தமடைந்தார்கள் என்பதாகப் பாடல் அமைந்த போதும், அது அவர்களின் சிறப்புக்களை எடுத்து இயம்புவதாக இருத்தலையும் கவனிக்க.

மருகிருக்கும் வேளூரின் வயித்திமகன்
குறமகளை மணந்தா னென்றே
உருகியர னஞ்சுண்டா னுமையவளுந்
தவம் புரிந்தா ளுயர்மான் மேனி
கருகிமிக மண்டின்றான் கமலன்முக
நாலானான் கடவு ளோர்கள்
இருவிழியு மிசையாம லிரவுபக
லுறங்காம லிருக்கின் றாரே.

மருக்கொழுந்து வாசனைச் செடிகள் உள்ள புள்ளிருக்கு வேளூரிடத்தே கோயில் கொண்டிருக்கும் வைத்தீஸ்வரனின் திருமகன் குறவனின் மகளை மணந்து கொண்டான். அதனை அறிந்ததும் அவன் தகப்பனான வைத்தியநாதன் நஞ்சைக் குடித்துவிட்டான். தாயாகிய உமையம்மையோ தவம்புரியப் போய்விட்டாள். மாமனான திருமாலோ தன் மேனி கருநிறம்பெற வருந்தியவனாய்ப் பெரிதும் மண்ணைத் தின்னத் தொடங்கினான். பிரம்மனோ முகத்தைத் தொங்கவிட்டவனானான். மற்றைய கடவுள்களோ கண்கள் இமையாதவர்களாகி இரவுபகல் கவலையுற்றவர்களாக உறங்காமல் இருக்கிறார்கள்.

## எப்படி வந்தான் "சீராளன்"?

திருவண்ணாமலையில் அருணாசலேஸ்வரரை வழிபட்ட காளமேகத்துக்குச் சிறுத்தொண்டர் கதை நினைவிலே வந்தது. சிறுத்தொண்டர் தன் மகனையே அறுத்துச் சமைத்து பரிமாறி நின்றபோது, பெருமான் "சீராளா" என்றழைக்க, அவன் ஓடி வந்து நின்ற திருவிளையாடலைப் போற்றி இவ்வாறு பாடுகிறார்.

சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்தி லேபாதி
இட்டகலத் திற்பாதி இட்டிருக்கத் - திட்டமுடன்
ஆடிவந்த சோணேசர் அன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தெவ்வா றுரை?

சட்டியிலே பாதியாகவும், அந்தச் சட்டியிலிருக்கும் சட்டுவத்திலே ஒரு பாதியாகவும், படைத்த உண் கலத்திலே இன்னொரு பாதியாகவும் இட்டிருக்கவும், உறுதியுடன் திருவிளையாடல் நிகழ்த்தவே வந்த அந்தச் சோணேசரான சிவபெருமான், அன்று அறுக்கப்பட்ட பிள்ளையை 'வருக' என்றழைத்தபோது அந்தப் பிள்ளையும் ஓடிவந்தது எவ்வாறு? என்று எமக்கும் சொல்லுவாயாக.

## ஏன் எரித்தீர?

திருவிடை மருதூர்ச் சிவபெருமானைக் குறித்து பாடியது இது. பெருமான் மன்மதனை எரித்த செயலை நிந்திப்பதுபோல அமைந்த செய்யுள் இது.

கண்ண னிடுங்கறியும் காட்டுசிறுத் தொண்டரன்பிற்
பண்ணுசிறு வன்கறியும் பற்றாதோ - தண்ணொடு
மட்டியையுஞ் சோலை மருதீச ரேபன்றிக்
குட்டியையேன் தீய்த்தீர் குறித்து?

தண்மையுடன் தேனும் பொருந்தியிருக்கும் சோலைகளையுடைய மருதூரில் கோயில் கொண்டிருக்கும் பெருமானே! காட்டினிலே கண்ணப்பன் படைத்த ஊன்கறியும், வீட்டினிலே சிறுத்தொண்டர் அன்பினாலே செய்தளித்த பிள்ளைக்கறியும் உமக்குப் போதாதோ? நீர் பன்றிக்குட்டியையும் ஏனையா சுட்டெரித்தீர்?

பன்றிக்குட்டியின் கறிக்கு ஆசைப்பட்டா? என்று பெருமானைக் கேட்கிறார் கவிஞர். 'பன்றி' என்பது பன்றியவதாரம் எடுத்த திருமாலையும், 'பன்றிக்குட்டி' என்பது திருமால் மகன் மன்மதனையும், தீய்த்தீர் என்பது மன்மதனை எரித்தமையையும் குறிக்கும்.

## கொன்ற பழி போமோ?

திருச்செங்காடு சென்று சிவபெருமானைத் தொழுதார் காளமேகம். "நாட்டிலிருந்து ஓடிவந்து காட்டிலே ஒளித்திருந்தால் நீர் முன்பு செய்த கொலை பாவங்கள் உம்மை விட்டுப் போய்விடுமா"? என்று இறைவன் திருவிளையாடல்களை எடுத்துக்காட்டித் துதிக்கின்றார்.

காலனையும் காமனையும் காட்டுச்சிறுத் தொண்டர் தரு
பாலனையும் கொன்ற பழிபோமோ- சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே நீர் திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக் கால்.

ஒழுக்கமுடையவர்போல நாட்டினிடத்தே பல ஸ்தலங்களிலும் கோயில் கொண்டிருக்கும் தலைவரே! நீர் திருச்செங்காட்டிலே வந்து தங்கியிருந்தவிடத்தும் எமனையும், மன்மதனையும், பக்திக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த சிறுத்தொண்டர் பெற்றெடுத்த 'சீராளன்' என்ற சிறுவனையும் கொலை செய்த்தனால் ஏற்பட்ட பழிச்சொற்கள் மறைந்து போய்விடுமா?

## ஆறுமுகன் பெருமை

ஒரு ஸ்தலத்திலே முருகன் பவனிவரும் ஆடம்பரத்தைப் பார்த்ததும், முருகன் பெருமையினைப் போற்றி வணங்க ஒரு செய்யுள் கிடைத்தது புலவருக்கு.

அப்ப னிரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி - சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை.

ஆறுமுகத்தினனான முருகனுக்கு இவ்விடத்தே நாம் கூறக்கூடிய பெருமைகள் யாவை எனில் பெற்ற தகப்பனான சிவபெருமான் பிட்சை ஏற்று உண்ணும் இயல்பினன். பெற்ற தாயோ மலையிடத்துப் பிறந்த கொடுமைக்காரி (நீலவண்ணம் உடையவள்), தாய்மாமனோ உறியிலே வெண்ணெய் திருடுபவன், சப்பைக் காலனான இவன் அண்ணனோ (மகோதரம் என்னும் பெரிய வயிராகத் தோன்றும் நோயினன்) பெரிய வயிற்றினை உடையவன். இவைதான் இவரது பெருமைகளாகும்.

"குடும்ப நிலைமையே இப்படியிருக்க இவருக்கு என்ன பெருமை வேண்டிக்கிடக்கிறது" என நிந்திப்பதுபோல முருகனைப் போற்றி நிற்கின்றார் காளமேகம்.

(தொடரும்...

உ

# சூரியநாராயணன்

**திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்**

ஒற்றைத் திகிரியனை, ஓரேழ் பரியானை,
கற்றைக் கதிரோனைக், கைம்மலரான் - மற்றினியே
பொய்கையினில் நீராடிப் போற்றிப் புது உளத்தான்
வைகறையில் வாழ்த்திடுவோம் யாம்.

சுருதியின் கண் முனிவரும் பின்னே
தூமொழிப் புலவோர் பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமையென் றேத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்
பரிதியே பொருள் யாவிற்கும் முதலே
பானுவே, பொன்செய் பேரொளித்திரளே,
கருதி நின்னை வணங்கிட வந்தேன்
கதிர்கொள் வாண்முகம் காட்டுதிசற்றே.

மேற்படி இரண்டு பாடல்களும் சூரியநாராயணனைப் போற்றி மகிழ்விக்கும் பாடல்களாகும். உலகில் உள்ள நூல்களில் மிகவும் பழைமையானது ரிக் வேதம் (இருக்கு வேதம்) ஆகும். அன்று முதல் இன்றுவரை சூரியனைப் பிரத்தியட்ச தெய்வமாகப் போற்றிவழிபடும் பாரம்பரியத்தை, நாம் நேர்த்தியாகக் கடைப் பிடித்து வருகின்றோம். தைப்பொங்கற் பண்டிகையானது சூரியனை பரத்துவப் படுத்தும் விசேடத்துவத்தைக் கொண்டதாகும். ஆதலால், சூரியன் இவ்வுலகில் கண்கண்ட தெய்வமாக இயற்கையோடியைந்து அருள்பாலிக்கின்றான். சூரியனை முழுமுதற்கடவுளாகச் சிருட்டிக்கும் மதம் சௌரம் என அழைக்கப்படும். எல்லாம் வல்ல இறைவன் சூரியன்மூலம் உலகங்களை நெறிப்படுத்துகின்றான். சூரியனுக்கு யாவும் அடிமை. தீமைகளை அழிப்பதில் மிகவும் வல்லவன். மனித இனத்தைப் புனிதப்படுத்துபவன்- ஆதலால், தை முதலாம் நாள் புது விருந்து படைக்கின்றோம். விருந்தினை மகிழ்வுடன் ஏற்று எம்மையும் வாழ்த்துகின்றான். இந்நிகழ்வு வாழ்க்கையில் தொடரப்படும் நல்லதோர் சகுனமேயாகும். சௌரமதத்தினர் மட்டுமல்லர், யாவருமே சூரியனை முதன்மைப்படுத்துவதனால் மக்களனைவரும் சௌபாக்கியவான்களேயாவர். இந்நிலையில், இக்காலகட்டத்தில் குழந்தைகளையும், சிறுவர்களையும் சூரிய வணக்கத்தில் ஈடுபடச்செய்வது பெற்றோர்களினதும், குருமார்களினதும் கடமையாகும். காரணம்; சூரியபகவானை நேரடியாகக் கண்டு, பார்த்துணர்ந்து, அனுபவித்து ஒத்துக்கொள்கின்றார்கள். அவனை வெற்றிகொள்ள முடியவில்லை. யாவர்க்கும் சாட்சியாக விளங்குகின்றான் அவன் நிரந்தரமானவன்- நிச்சயமானவன்- நீதியானவன்- நிகரில்லா கடமைவீரன்.

எப்பொழுதும் பிரகாசமாக இருப்பவன். இருளையும், ஆணவத்தையும் விரட்டு பவன். சிறப்பாக உயிரினங்களனைத்தை யும் சமமாக மதிப்பவன். உயர்வு, தாழ்வு, பாராட்டாதவன். என்றும், எதற்கும், எதிலும் வல்லவனும், வாழ்வளிப்பவனும் அவனே. உழவர் பெருமக்களுக்கும், மாணவர் களுக்கும், கல்வியாளர்களுக்கும், மெய்ஞ்ஞானியருக்கும், விஞ்ஞானிகளுக் கும் ஞாயிறாம் சூரியனே வல்லமை கொடுக்கின்றான். வாழ்வளிக்கின்றான். ஞாயிற்றினை வணங்குவதற்கு நாம் கொடுத்து வைத்தவர்களேயாம் அவன். உள, உடல் ஆரோக்கியம் பேணும் அமிர்தாயனும்கூட.

"ஓம் அமிர்தாய நம"

## ஞானச்சுடர் மாண்பு

கற்கண்டு தேன் கலந்த தீன்
அமுது உண்பது போல்
நற்பழச்சுவை கலந்தே நாற்றிசை
பரந்து பெய்யும் தேன்மழை இதுவே,
கைப் பற்றிக் கண்ணில் காணக் காத்துமே
"ஞானச் சுடரினை" நோக்கி நிற்கும்
பற்பல பேரில் யானும்
ஒருவனாய் ஆவல் கொண்டேன்.

அப்பனுக்கு உபதேசித்த ஆறுமுகன் முருகன்
ஆலிலை அமுது உண்ணும் பாலனை
எப்பவும் நோக்கி நன் னினைவது கூட்டும்
ஒப்புயர் வற்ற "ஞானச் சுடரினை"க் கண்டோம்;
இப்போரில் மூழ்கி மாயும் இடரிலும்
பெரியதான ஆதரவாய்க் காண
தப்பாது மாதா மாதம் மகிழ்வுடன் தந்திடுவீரே
பல்சுவை அறிவு யாவும் சேர்த்தே ஒன்றாய்.

முருகனின் செயல்கள் யாவும் வியந்துமே போற்றுகின்ற நற்
றமிழ் அறிவாளர் பலரை
வருகவென அழைத்தே, எம் அறிவையும் வளர்க்கும்
தமிழ் வளர்க்கும் தமிழ்ச் சிறப்பை
இதுவரை கண்டிடாத சுவாமி அவர்கள் செயலை
இடைவிடாது பார்க்க மனம் துடிக்கும் இம்மலரை
புதுப்புது அறிவை யூட்டும் "ஞானச் சுடரை"
வருக வென ஆண்டு (200)8 இல் வாழ்த்துவோமே.

*திரு சின்னப்பு தனபாலசிங்கம் அவர்கள்.*

# கதிர்காமக்கந்தனின் திவ்விய அழைப்பு

## 2006ஆம் ஆண்டு கதிர்காம யாத்திரையின்போது ஏற்பட்ட அற்புத அருளனுபவங்கள்

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

அப்பன் முருகன் முன்பு கனவில் காட்டிய காடு மலைகள் மயில்கள் எல்லா வற்றையும் கண்டு செல்லக்கதிர்காமம் சென்று மாணிக்ககங்கையில் நீராடி அப்பன் விநாயகனை உளமாரத் துதித்து அவனருளை நிறைவாகப் பெற்றோம். பின் கந்தப்பெருமானின் திருவாலயத்தை யடைந்தோம். கனவில் காட்டிய ஆலயச் சூழல்களையும் ஆலய அமைப்புக்களை யும் கண்டு கந்தனின் கருணையை வியந் தோம். உள்ளங்குளிரக் கந்தப்பெரு மானை வணங்கி அவனின் திருவருளில் திளைத்திருந்தோம். மறுநாள் கதிரமலை யேறி அப்பன் முருகனைத் தரிசிக்க ஆயத்தமானார்கள். "ஐயா மலையேறு வது கடினம்" என எம்முடன் வந்த அடியவர்களில் சிலர் கதைப்பது என் காதில் வீழ்ந்தது. காலில் பாதரட்சை இல்லாமல் நடப்பது என்பது எமக்கு இய லாத காரியம்தான். ஆனால் அடியார்கள் கதைக்கும்போது அப்பா முருகா இவ் வளவு தூரம் இருந்துவந்து ஊன் கதிர மலை அழகைக்காணாமல் திரும்புவதா என்று முருகனிடம் வேண்டிக்கொண்டிருந் தேன்.

மறுதினம் அதிகாலையில் மாணிக்க கங்கையில் நீராடித் தேங்காயைத் தாங்கி வெறுங்காலுடன் கரடுமுரடான பாதை களைத் தாண்டி கதிரமலை உச்சிக்கு அழைத்துத் தன் கதிரமலை அழகைக் காட்டி, தமது கூர்ந்து அகன்று ஆழ்ந்த பிரமாண்டமான வேல் அழகைக்காட்டி எமது மனத்துயரைப்போக்கி எமது ஆவலை நிறைவுசெய்தான்.

மலையுச்சியிலுள்ள வேலாயுத னுக்கு ஆச்சிரம சுவாமிகளும் நாமும் அபிஷேகம் செய்து, சுவாமிகளும் நாமும் அடியவர்களும் ஒன்றுகூடி நெய்த்தீபம் ஏற்றி வானை எட்டும்வண்ணம் முருகநாம பஜனை செய்தோம். முருகபஜனையில் நாம் மெய்மறந்து ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கீழுள்ள படியில் நின்று ஐயா! ஐயா! என அழைக்கும் ஒரு குரல் கேட் டது. திரும்பிப் பார்த்தபொழுது நாம் வழியனுப்பிவைத்த தவயோகம் அம்மை யார் எனை நோக்கி "எப்படி வந்தீர்கள் ஐயா" என்று கண்களிலிருந்து நீர் சொரிய ஆச்சரியத்துடன் வினாவினார். உங்களிடம் நீங்கள் புறப்படும்போது சொன்ன வாக்கியங்கள் அப்பன் முரு கனின் காதில்கேட்டுவிட்டது. உடனே எம்மை உங்களுக்கு முன்பே அழைத்து வந்துவிட்டான். அம்மையாரும் மிகப்பரவச மடைந்த நிலையில் எம்முடன் சேர்ந்து பஜனையில் ஈடுபட்டார். அப்பன் முரு கனின் அருளை வியந்தவண்ணம் அவரிட மும் விடைபெற்று மலையிலிருந்து இறங்கினோம்.

சுந்தரரும் சேரமானும் கைலைக் குப் புறப்படும்பொழுது ஔவையாரும் அவர்களுடன் கைலைக்குப் போக விரும் பினார். விநாயகர் அந்நேரம் "பூஜையை ஆறுதலாகச் செய். உன்னை நான் கைலை சேர்க்கின்றேன்" என்று கூறி

சுந்தரரும் சேரமானும் கைலை சேர்வதற்கு முன் ஒளவையாரைக் கைலை சேர்த்தமை எமது ஞாபகத்துக்கு வந்தது.

இத்துடன் இன்னுமொரு அற்புதமான திருவிளையாடலையும் புரிந்தார். "எனது திருத்தலங்கள் தோறும் சென்று என் புகழ் பாடும் நீ இங்கும் (கதிர்காமத்திலும்) என் புகழ் பாடவேண்டும்" என்றும் பெருவிருப்புக் கொண்டான்போலும். நாம் இந்து கலாச்சார அமைச்சின் மண்டபத்தில் தங்கியிருந்தபொழுது என்னையாரும் அறிந்திராத அப்புதிய சூழலில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கதிர்காமக்கந்தனின் உற்சவ நேரடி வர்ணனையில் எம்மைப் பங்குபற்றவைத்துத் தனது புகழைப் பேசவும் பாடவும் வைத்தான்.

எம்பெருமானைத் தரிசித்த நிறைவுடன் செல்வச்சந்நிதி திரும்பிய மாலை A9 பாதை தடைசெய்யப்பட்டுவிட்டது. இல்லாவிடில் நாம் பெரும் இக்கட்டான நிலையை அடைந்திருப்போம். தமது தரிசனையைக் கண்டுகளிக்க அழைத்த கருணை வள்ளல் எவ்வித இடையூறுமின்றி எம்மைப் பாதுகாப்பாக அனுப்பி வைத்தார். அன்றிரவு செல்வச்சந்நிதியில் தங்கி மறுநாட்காலை செல்வச்சந்நிதியானை மனமாரத்துதித்து அவன் திருவருளைப்பெற்ற நிறைவுடன் எமது இல்லிடம் திரும்பினோம்.

யான் வழியனுப்பி வைத்த அம்மையாரிடம் யான் கூறிய வாசகங்களை முருகப்பெருமான் தனது திருச்செவிகளில் ஏற்று எமக்கு அருள்பாலித்தமையை என்னால் இன்றும் மறக்க முடியாதுள்ளது. இவ்வளவு காலமும் எத்தனையோ அடியவர்கள் என்னிடம் சொல்லி விடைபெற்று கதிர்காம யாத்திரைக்குச்சென்று அப்பன் முருகனைத் தரிசித்துள்ளனர். ஒருவரிடமும் "உன் மகனுக்கு ஏலாதாம் வந்து கூட்டிக் கொண்டு போகட்டாம்" என்று சொல்லும்படி ஒரு வாசகத்தை இதுவரை காலமும் யான் ஒருவரிடமும் கூறவில்லை. ஆனால் எனது கோரிக்கையைக் கூறியதும் அதனை நிறைவேற்றிவைத்த முருகன் பெருமையை அருளை கருணையை என்ன என்று சொல்லுவது என்றே எனக்கு விளங்கவில்லை.

இவற்றுடன் எமது பயண ஒழுங்குகளைச் செய்துதந்த ஆச்சிரம சுவாமிகளின் புனித கைங்கரியத்தை எவ்வாறு போற்றிப்பாராட்டுவதென்று எமக்குப் புரியவில்லை. யாத்திரையின்போது எம்முடன் வந்த அடியவர்களின் சகல வசதிகளையும் மிக்க பொறுப்புணர்வுடன் கவனித்து வந்தார்கள். அவர்கள் நிறைவான இறை அனுபவத்தைப் பெறவைத்த சுவாமிகள் எம்மீது தனிப்பரிவுடன் எமது நலன்களைக் கவனித்துச் செயலாற்றி எம்மைத் தம் குழந்தைபோல் அரவணைத்து யாத்திரையின் நிறைவை அனுபவிக்கச் செய்தமை இதுவும் முருகன் திருவருளே. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது எவ்வளவு உண்மை என்பதனைப் புரிந்து கொண்டு எம்மனம் பேரானந்த நிலையடைகிறது.

கதிரமலை அழகை மீண்டும் எப்பொழுது
தரிசிப்போமென்று எமதுள்ளம் ஏங்குகின்றது
முருகா சரணம்.

(முற்றும்)

மனிதன் தன்னை மென்மேலும் உயர்த்திக்கொள்ளாவிடில் அவன் இழிந்த பிறவிதான்.

உ

# போற்றிப்பாடி வழிபட்டு உய்வோமாக

திரு ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள்

"ஆடும் பரிவேலணி சேவலெனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய் தேடும் கயமாமுகனைச் செருவிற் சாடும் தனியானை சகோதரனே" என அருணகிரிநாதர் முருகப்பெருமானின் அநுபூதி நிலையைக் கந்தரநுபூதியிற் பாடினார். அந்த அநுபூதியின் முதற்பாடல் இது. இங்கு அருணகிரியார் எதைக் கேட்கிறார் என்றால் "எனக்கு பொன், பொருள் தா என்று கேட்கவில்லை. உன்னைப் பாடும் பணியை எனக்குத் தா" என்றே கேட்கின்றார்.

நம்முடைய வழிபாட்டு முறைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகிய சிந்துவெளி நாகரிக காலத்திலேயே பாடி வழிபட்டமைக்கான சான்றுகளை சேர் ஜோன் மார்ஷல் போன்றோர் குறிப்பிடுகின்றார்கள். வேத காலத்தில் இருக்குவேத மந்திரப் பாடல்களே தேவர்களைப் போற்றித் துதிக்கும் பாக்கள். இவை இன்றும் நம்முடைய ஆலயங்களில் ஒலித்துக்கொண்டுதாம் இருக்கின்றன, மேலும் சாமவேதம் இசையோடு பாடப்படவேண்டுமென்பதை இசை நுணுக்கங்கள் மிகத்தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன.

சிவாகமங்களை நோக்குவோமாயின் அங்கும் பாடும் பணி நன்கு சொல்லப்பட்டிருக்கின்றது. சிவாலயத்தில் நடைபெறும் சோடோபசாரங்களில் பூஜையின் ஓர் அங்கமாகத் தோத்திரம் இடம் பெறுகிறது. இதனாலேயே வடமொழித் தோத்திரமாகிய வேத பாராயணத்தை தொடர்ந்து தமிழ் வேதமாகிய தேவார பாராயணம் இடம்பெற்று வருகிறது. இவை இரண்டுக்குமிடையில் ஆசீர்வாதத்தைச் சொருகக்கூடாது என்று இன்றும் சைவச் சான்றோர்கள் கூறிவருகின்றார்கள். கொடியேற்ற, கொடியிறக்கம் போன்ற காலத்தில் நவ சந்திகளிலும் பண்ணிசைக்கப்படுகிறது. உண்மையில், இன்று பல ஆலயங்களில் குறிப்பிட்ட பண் பாடுகிறார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இவை இறைவனைப் பாடி வழிபடவேண்டும் என்பதை நமக்குத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன. புராணங்களிலும் தோத்திரம் என்ற ஒரு வழிபாட்டு முறையைக் கூறியிருக்கக் காணலாம். தேவர்கள் தங்களுக்குத் துன்பம் வருகின்ற காலத்தில் சிவனைப்போற்றிப் பாடல்கள் பாடித் துதித்தார்கள். இன்று புறச்சமயத்தவர்கள் நமது சொத்தைத் திருடித் தாமும் பயன்படுத்துகின்றனர். ஆனால் எங்களுடைய இறைவனது தோற்றப்பொலிவுகள் பாடல்கள் பாடவேண்டும் அவற்றிற்குரிய இசைக் கருவிகள் இசைத்து மெருகூட்டப்படவேண்டும் என்பதைக் காட்டி நிற்கின்றன. சிவன் வீணா தெட்சணாமூர்த்தியாகக் கையில் வீணையுடனும், நடராஜராகக் கையில் உடுக்கையுடனும், உமை சரஸ்வதியாகக் கையில் வீணையுடனும், கிருஷ்ணன் கையில் புல்லாங்குழலுடனும், பல தெய்வங்கள் கையிலே சங்குடனும் காணப்படுவதும் நந்திதேவர் மிருதங்கம் வாசிப்பவராகவும், நாரதர் தம்புரா மீட்டுபவராகவும் இருப்பதும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்திக் காட்டுகின்றன. மேலும் சங்கமருவிய காலத்தில் வாழ்ந்த

காரைக்காலம்மையார் எனும் புனித வதியார் நான் உன்னை மகிழ்ந்துபாடி உன்னடியில் இருக்க வேண்டும் எனக் கேட்டுத் திருவிரட்டை மணிமாலை, திரு வாலங்காட்டு மூத்த திருப்பதிகம், அற்புதத் திருவந்தாதி என்பவற்றைப் பாடினார். பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார் கள் சிவனைப் போற்றிப் பாடுவதையே பணியாகக் கொண்டு பாடினார்கள். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன் "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாட வேண்டும்" நெக்குருகி ஆட வேண்டும்..." என்னும் நாயன்மார்களின் வாசகங்கள் நாம் இறைவனைப்பாடி வழி படவேண்டும் என்பதைக் காட்டவில்லையா?

3000 திருமந்திரப் பாடல்களைப் பாடிய தவயோகி திருமூலர், என்னை இறைவன் எதற்காகப் படைத்தான் என் றால் நம்மைப்போல் கன்ம வினையின் பயனை அனுபவிக்க அல்ல. தன்னைத் தமிழாற் பாடும்படி எனத் தன் திருமந் திரத்திலேயே பின்வருமாறு கூறுகின்றார்.

"பின்னை நின்றென்ன பிறவிபெறுவது
முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

ஒருசமயம் மார்கழித் திருவாதிரை நாளில் சிதம்பரத்தில் தில்லை நடராஜப் பெருமானின் தேரை எல்லோரும் இழுத் துத் தேரோடவில்லை. அவ்வேளை எங் கிருந்தோ வந்த சிவனடியார் சேந்தனார் "மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போயகல" எனத் திருப்பல் லாண்டு பாடிய வேளையிலே தேர் ஓடிய தல்லவா? இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன என்றால், நாம் இறை வனைப் போற்றிப்பாட வேண்டும். இதுவும் ஒரு சுலபமான வழிபாட்டு முறை என்ப தைக் காட்டுகின்றன.

சிவன் தான் விரும்பியே ஞானப் பாலைக் கொடுப்பித்துச் சம்பந்தரைப் பாட வைத்தான். சூலை கொடுத்து நாவுக் கரசரைப் பாடவைத்தான். "நாவுக்கு அரசு" எனப் பட்டமும் கொடுத்தான். ஓலை கொடுத்துச் சுந்தரரைப் பாட வைத்தான். இது மட்டுமா? திருவாசகம் தந்த மணிவாசகரையே குருந்த மர நீழலில் ஆட்கொண்டு பாடவைத்தானே. பாட முடியாது தடுமாறிய சேக்கிழா ருக்குத் தில்லை நடராஜப் பெருமான் "உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்" என்று அடியெடுத்துக்கொடுத்துப் பெரிய புராணத்தையே பாட வைத்தானே. முரு கப்பெருமான் காஞ்சி குமரக்கோட்டத்துக் கச்சியப்ப சிவாச்சாரியாருக்குத் "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்துக் கந்தபுராணத் தைப்பாட வைத்ததுமன்றி அருண கிரிநாதர் வாழ்க்கை முடித்துக்கொள்ள எண்ணியவேளை முருகப்பெருமான் அவரைத் தாங்கி "முத்தைத் தரு பத்தித் திருநகை அத்திக்கிறை சத்திச் சரவண முத்து" என அடியெடுத்துக் கொடுத்து 36 ஆயிரம் திருப்புகழைப் பாட வைத் தானே. அத்தோடு கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்விருத்தம், கந்தரந்தாதி எனப் பாட வைத்தானே. இவையெல்லாம் இறைவனைப் பாடி வழிபடவேண்டும்

**சோதனைகள்தாம் ஒரு மனிதனை அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றன.**

என்பதைக் காட்டுகின்றன அல்லவா.

நாயன்மார்கள் பாடிய தேவாரங்கள் எத்தனை எத்தனையோ அற்புதங்களைச் செய்தன. கண்ணினாலுமைக் காணக் கதவினைத் திண்ணமாகத் திறக்கச் சொல்லித் திறப்பித்தமை, நல்விழாக்கள் காணாதே போதியோ பூம்பாவாய் என எலும்பைப் பெண்ணாக்கியமை, பையவே சென்று பாண்டியற்காகவே எனச் சமணர் இட்ட தீயைப் பாண்டிய மன்னனுடலிற் புகச்செய்து வெப்பு நோயாக்கியமை, வேந்தனும் ஓங்குக எனப் பாண்டிய மன்னனின் கூன் போக்கியமை, அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை என மதயானையை வழிபடச் செய்தமை, மற்றக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்து போதிரே எனப் பாடிக் கட்பார்வை பெற்றமை எனப் பலவற்றைக் காண்கிறோம்.

பகழிக்கூத்தர் தீராத வயிற்று வலியாய் இருந்து வைத்தியங்கள் பல செய்தும் மாறாதபோது முருகனைச் சென்று வழிபட்டார். முருகனைப் பிள்ளைத் தமிழாற் பாடினார். வருந்தி யழைத்தால் வாராதிருக்க வழக்குண்டோ என்றதும் முருகன் வந்தான். வயிற்றுவலி போக்கினான் அல்லவா? நக்கீரர் குகைக் குள்ளே தன்னோடு இருந்த 999பேரையும் விடுவிப்பதற்காகத் திருமுருகாற்றுப்படை பாடி அக்குகையையே துகளாகச் செய் தாரல்லவா? இப்படிப் போற்றிப் பாடி வழிபட்டு வரம் பல பெற்ற அடியார் வழிநின்று நாமும் உய்வோமாக.

## கதிர் காம வேலவர் பாமாலை

வேலவா உனை நம்பினேன் இங்கு வா வா
வந்தருள் செய்
பச்சை மயிலின் மீது ஏறி வள்ளி தெய்வானையுடன்
ஓடிவா ஓடிவா ஓடிவா
(வேலவா உனை)

பெற்ற தாய் தந்தை குரு நீயன்றோ
உற்ற துணை வேறுண்டோ சொல்
செல்வ வள்ளி நாதா
இருளை நீக்கி அருளொளி பெருக்க வருக (2)
அன்பா வருக இன்பா வருக நண்பா வருக
ஐயா வருக மெய்யா வருக
எனையாளும் செல்வ முத்துக் குமரையா வருக
கந்தா வருக கடம்பா வருக
கதிர மாமலை முருகா வருக (2)
தக தக என நடனமிடும்
கதிர்காம வேலோனே வருக (2)
(வேலவா உனை)

வேலுண்டு வினை இல்லை
மயில் உண்டு பயம் இல்லை
குகன் உள்ளான் குறையில்லை
கந்தன் உள்ளான் கவலை இல்லை.

*அமரர் S.K. சிவபாலன் அவர்கள்*

# இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க!

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

ஒரு தலையங்கத்தில் எழுதிவந்த தொடரை நிறுத்தி மற்றொரு தொடரை ஆரம்பிக்குமுன், இடையே ஒரு விடயத்தைக் கூறலாம் எனக்கருதி இக்கட்டுரையை எழுதுகிறேன். இதே விடயத்தை ஏற்கனவே இரு மலர்களில் எழுதிவிட்டேன். கூறியதை மீண்டும் மீண்டும் கூற இரு காரணங்களுள்ளன. ஒன்று அதனை எல்லோருக்கும் கூறி நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஆவல்.

விரும்புவதும் அதைக் கூறுவதும் இலகு. அதை நடைமுறைப்படுத்துவது கடினம். அப்படி நடைமுறைப்படுத்தும் ஆற்றல் என்னிடம் அறவே கிடையாது. எனினும் நடைமுறைப்படுத்தக்கூடிய ஓரிடத்தைக் கண்டதும் அதை மீண்டும் கூற வேண்டுமென்ற எண்ணமெழுந்தது.

அண்மையில் எங்கள் கிராமத்தில் ஒரு கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவ்விழாவிற்கு நல்லை ஆதீன முதல்வர் வந்து ஆசியுரை வழங்கினார். கும்பாபிஷேகம் என்பதால் சனத்திரள் இருந்தது. சுவாமிகள் "நம பார்வதி பதயே" எனக் கூறியபோது "ஹர ஹர மகாதேவா" கோஷம் ஓங்கி ஒலிக்கவில்லை. சுவாமிகள் அதைக் குறிப்பிட்டு மீண்டும் மீண்டும் கூறவைக்கவேண்டியிருந்தது. இந்த நிலை பெரும்பாலான இடங்களிலே காணப்படுகிறது. கோவில்களில் பஞ்சபுராணம் ஓதும் நேரம், பூசை வழிபாடு முடிந்து ஓய்வெடுக்கும் நேரமாகக் கருதப்படுவதாகப் பெரியார் இரா. செல்வவடிவேல் அவர்கள் தனது சொற்பொழிவின்போது கூறிக் கவலைப்பட்டது இச்சந்தர்ப்பத்திலே நினைவிற்கு வருகிறது.

2008 தைத்திங்கள் ஞானச்சுடரிலே 'சந்நிதியான்' கட்டுரைத் தொடரில் திரு ந. அரியரத்தினம் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் அறுபத்துமூவர் நாயன்மார்களுக்கான குருபூஜை பற்றி எழுதியிருந்ததை நீங்கள் வாசித்திருப்பீர்கள். அதே ஞானச்சுடர் மலர் வெளியீட்டு நிகழ்விற்கெனச் சென்ற எனக்கு இந்தக் குருபூஜையில் பங்கு கொள்ளும் பேறும் கிட்டியது. திரு அரியரத்தினம் அவர்கள் எழுதிய சில வரிகளை மீண்டும் இங்கு தரவேண்டிய அவசியம் எனக்கிருக்கிறது.

"இவ்வாறான அறுபத்துமூவர் குருபூசையின் பொழுது ஆச்சிரமத்தின் சுவாமிகள் இனிமையான, அதேநேரம் கம்பீரமான அந்தக்குரலால் இசைக்கின்ற அந்த பஜனைப் பாடல்கள் அனைவருக்கும் பக்தி உணர்வினை ஊட்டுபவையாக இருக்கும். அத்துடன் அந்தப் பாடல்களை அடியார்கள் திருப்பி, கூட்டாகப் பாடுகின்ற காட்சி அந்தச் சூழல் முழுவதையும் பக்திததும்பும் நிலைக்கு இட்டுச் செல்வதாக அமைந்திருக்கும்"

என அவர் தனது கட்டுரையில் எழுதிச்செல்கின்றார். இந்த அனுபவம் எனக்குக் கிட்டியபோதுதான் எனது கருத்தை ஞானச்சுடரிலும் எழுதவேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. அந்தக்குரல் சாதாரணமாக எழவில்லை. உள்ளத்திலிருந்து ஒரு மகா சக்தியுடன் எழுகின்றது.

இன்று நமது நாடுமட்டுமல்ல உலகின் சகல நாடுகளிலுமே மக்கள் ஏதோ ஒருவகை துன்பதுயரங்களால் அல்லற்படுகிறார்கள். ஓரிடத்தில் போர், மற்றோர் இடத்தில் இயற்கை அழிவு, வேறொரு தேசத்தில் நோய், மற்றொரு நாட்டில் வறுமை. இவற்றிற்கெல்லாம் 'கலியுகம் இப்படித்தானிருக்கும்' என்று நாம் சமாதானம் கூறிக்கொள்கிறோம். "இறைவன் இப்படியெல்லாம் செய்கிறானே என்று நொந்துகொள்கிறோம். இதனால் என்ன பயன்?

நாம் சரியாக நடக்கிறோமா? இல்லையே. எமக்கு எது நன்மை செய்யும்? எது தீமை செய்யும்? என்பதைத் தெரியாமலே எமக்கு வேண்டுமென்று எதையெதையெல்லாமோ கேட்கிறோம். சரி, எமக்குத் தேவையென்று எண்ணுகின்றவற்றையெல்லாமே இறைவனிடம் கேட்போம். அத்துடன் ஒருசில நிமிடங்கள் நல்லவற்றையும் வேண்டித் துதித்தால் நல்லதல்லவா?

கோவிலில் நடைபெறும் பூசைகள் முடிந்தபின் கிராமம் முழுவதுமே, உலகம் முழுவதுமே நலமே இருக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கும் சுலோகங்களைச் சிவாச்சாரியார் கூறி வழிபடுகின்றார். ஆனால் அதை நாம் புரிந்துகொள்ளாததால் அந்தப் பிரார்த்தனையை நாம் செய்வதில்லை.

திருமுறைகள் ஓதி இறுதியாக வாழ்த்தும் பாடுவார்கள். அதிகமாகப் பாடப்படும் வாழ்த்தைப் பார்ப்போம்.

வான்முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க, மன்னன்
கோன்முறை அரசு செய்க, குறைவிலா துயிர்கள் வாழ்க,
நான்மறை அறங்களோங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

இந்த வாழ்த்தை நாம் மனமொன்றிப்பாடி, அதன் பொருளுணர்ந்து, இறைவனிடம் வேண்டியிருக்கின்றோமோ? கோவிலில் பாடும்போதுகூட சிந்தையைச் சிதற விடுகிறோம். "லோகா சமஸ்தா சுகினோ பவந்து" என்று சிவாச்சாரியார் வேண்டுகிறார். "உலகம் முழுவதும் நன்றாக இருக்க வேண்டும்" என அந்தச் சமயத்தில் அதைப்புரிந்துகொண்டு நாம் வேண்டுதல் செய்யாவிட்டாலும் திருமுறைகள் ஓதி முடிந்ததும் "இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!" என வேண்டும் வழமையையாவது கைக்கொண்டு வேண்டுதல் செய்யலாமல்லவா? இந்த வழமை இன்று அருகிவருகிறது.

மனத்தையும் புலன்களையும் அலையவிட்டுவிட்டு, வாயினால் ஏனோதானோவென்று பாடியோ, பூக்களால் அர்ச்சித்தோ, கைகளைக் கூப்பியோ, "ஹர ஹர" கூறியோ பயனில்லை. மனமொன்றி வேண்டும் பக்திக்கு மிகுந்த சக்தியுண்டு. ஒருவரின் பக்திக்கே சக்தியுண்டென்றால் பலர் செய்யும் கூட்டுப் பிரார்த்தனைக்கு வலிமை அதிகம். அந்தப் பிரார்த்தனையும் ஒரே பொருளை வேண்டிநின்றால் அது நிச்சயம் கிடைக்கும். எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று தேவைப்படலாம். ஆனால் உலகம் முழுவதும் நலமாயிருப்பது அனைவருக்கும் வேண்டியது. எங்கள் நாட்டிற்கு அமைதியும் சமாதானமும் வேண்டுந்தான். வீட்டிற்கு, நாட்டிற்கு என்ற சுயநலத்தை

விட்டுவிட்டு, "உலகம் முழுவதும் நலம் பெறவேண்டும். உலகம் முழுவதும் இன்பமாயிருக்க வேண்டும்" என்று வேண்டுவதே நல்லது. பக்கத்து வீட்டில் தீ மூண்டால் என் வீட்டிற்குச் சேதம் வராதென்பது என்ன நிச்சயம். இன்று இங்கிலாந்தில் புயலடித்தால் "அக்கா வீட்டிற்கு என்ன ஆச்சோ?" என்றும் அமெரிக்காவில் வெள்ளம் வந்தால் "அண்ணாவும் பாதிக்கப்பட்டாரோ?" என்றும் கனடாவில் ஏதோ குழப்பமென்றால் "தம்பி எப்படி இருக்கிறானோ?" என்றும் ஏங்கிப் பழகிவிட்ட எமக்கு உலகம் முழுவதும் நலமாயிருக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க வேண்டியதன் அவசியத்தை அதிகம் வலியுறுத்த வேண்டியதில்லை.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் மேற்குறித்த வாழ்த்தும் "இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!" என்ற பிரார்த்தனையும் ஒருமித்த குரலில் பக்திமயமான வேண்டுதலாக ஒலித்தபோது, இத்தகைய பிரார்த்தனை எல்லா இடங்களிலும் இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டுமென எண்ணினேன். வேறு பல இடங்களிலும் இத்தகைய பிரார்த்தனைகள் நடைபெற்றுவரலாம். வேறு இடங்களில் நடைபெறுவதில்லை என நான் கூறமுனையவில்லை.

நான் வலியுறுத்த விரும்புவதென்னவென்றால் கோவிலோ வேறிடமோ பிரார்த்தனை நடக்குமிடத்தில் இருக்கும் அனைவரும் ஒரு நிமிடம் மனமொன்றி உலக நலனுக்காக இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும். திருமுறை ஓதுபவரும், பஜனைக்கோஷ்டியினரும் மட்டுமன்றி வழிபாட்டிலீடுபட்ட அனைவரும் சேர்ந்து, ஒருமுகமாகப் பிரார்த்திக்க வேண்டும். அந்தப் பிரார்த்தனையின் வலிமை மகத்தானது. அது எம் அனைவருக்கும் நன்மை அளித்து உலகையே ஆனந்த மயமாக்கும்.

## ஆறுதல் தந்திடும் அன்னதானக் கந்தனே!

ஆலிலையில் அன்னமிட்டுண் வேலவனே
ஆறுதலின்றி அடியார்கள் அலைகடல் துரும்பாய்
ஆற்றுவார் யாருமின்றி இன்று சந்நிதிவேலவா
ஆற்றுப்படுத்திடு அன்னதானக் கந்தனே!

ஆயிரம் ஆயிரம் சந்நிதி அன்னசத்திரம்
ஆங்காங்கு தோன்றினும் அருளோடு அமுதூட்டும்
ஆற்றங்கரை சந்நிதியான் ஆச்சிரமமே சமய சமூக
ஆற்றுபணியாவும் அமுதகலாயோகியுடன் சீர்பெற்று வாழி!

*சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்.*

**உள்ளத்தின் உட்கூரப்பே கவலையும் களிப்பும், அவை வெளியிலிருந்து வருபவை அல்ல.**

உ

# யார், எதை, எங்கே, எப்படி, எப்போது, ஏன் செய்யவேண்டும்?

## இன்னும் சில சிந்தனைகள்

### திரு கோப்பாய் சிவம் அவர்கள்

ஐப்பசி மாத ஞானச்சுடர்ப் பத்திரிகையில் (சுடர் 118) "யார், எதை, எங்கே, எப்படி, எப்போது, ஏன் செய்யவேண்டும்? என்ற கட்டுரையையும் அதற்கு முன்னரே வெளிவந்திருந்த "கடவுளுக்குக் கண் இல்லையா? (வைகாசி மலர், சுடர் 113) கட்டுரையையும் பலர் பாராட்டியிருந்தனர். அது ஒரு விடயத்தை நிருபிக்கிறது. சரியான முறையில் நாம் நமது இந்துசமய நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் பலர் நம்மிடையே உள்ளனர். ஆனால் அவர்களுக்கு நல்ல வழிகாட்டிகள் தேவை என்ற உண்மைதான் அது. அதே போல் வேறு பலருக்கு விழிப்புணர்வை ஊட்டவும் இத்தகைய கட்டுரைகள் உதவும்.

இருந்தாலும், "நம்மைத் திருத்த ஒருவர் தேவையா?' என்ற எண்ணத்துடன் 'பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்ற கொள்கையுடனும் சிலர் இருக்கிறார்கள் என்பதை அண்மையில் வெளியான ஒரு பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கமொன்று உணரவைத்தது.

"போட்டாபோட்டியில் கோவில் கட்டுவது முதல் தெருவழியில் இருக்கும் ஆலடி வைரவருக்கு மாபிள் பதித்து மகா கும்பாபிஷேகம் நடாத்துவதுவரை நடந்தேறும் அதேநேரம் எத்தனையோ பாடசாலைகளில் குடிநீர், மலசலகூட வசதி இல்லாத அவலம் ஒரு புறமும் நூறு ஓடும் பத்து மரமும் இருந்தால் ஒரு வகுப்பறையைத் திருத்தலாம் என்ற நிலை மறுபுறமும் இருந்தும் அதனைச் செய்வதற்கு யாருமே முன்வருவதில்லை" என்று யாழ்ப்பாணத் தமிழ்த் தினசரி ஒன்றின் ஆசிரியத் தலையங்கத்தின் உண்மையான ஆதங்கத்தை உணரத் தவறிய சிலர் சீறிப் பாய்ந்து விமர்சனங்களை எழுதினார்களாம்.

கோவில் கட்டுவதைப் பிழை என்று யாரும் கூறவில்லையே! தேவை உணர்ந்து சரியான வழியில் தர்ம கைங்கரியம் செய்யப்படவேண்டும் என்பது தான் முக்கியமானது. அதனைச் சரியான முறையில் எடுத்துக்காட்டிய ஆசிரியரைப் பாராட்டாமல் விட்டாலும் பரவாயில்லை. விமர்சனம் வேறு தேவையா?

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற முதுமொழி என்றும் நினைவிற் கொள்ளப்படவேண்டும். ஆலயங்கள் மக்களுக்கான ஆன்மீகப் பணியைச் சரியாக நிறைவேற்றுவதுடன் சமூகப் பணியிலும் அக்கறை காட்ட வேண்டும். ஆலயங்களுடன் சமாந்தரமாக அறப்பணிபுரியும் நிலையங்கள் (சந்நிதியான் ஆச்சிரமம் போன்றவை) அவசியம் இயங்க வேண்டும். அவை சமய, சமூகப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கல்வி, வைத்தியம், அன்னதானம் முதலியவற்றை முன்னெடுத்துச் செல்லவேண்டும். ஆலயங்கள் கட்ட இலட்சக்கணக்கில் பணம் அனுப்பும் நமது அன்பர்கள் இத்தகைய பணிகளுக்கும் ஆயிரக்கணக்கிலாவது

**எல்லோரும் தம்மை விட்டுவிட்டு வேறுயாரையோ சீர்திருத்த முயல்கிறார்கள்.**

பணம் கொடுக்கவேண்டும்.

இது ஒருபுறம் இருக்க, இறந்தவர்கள் பெயரால் நற்கருமங்கள் செய்தல் அவர்களது ஆன்மாவைக் கடைத்தேற்ற உதவும் என்பது நமது நெடுங்கால நம்பிக்கை. வருடந்தோறும் அவர்கள் பெயரால் அன்னதானங்கள், மற்றும் பல தர்மங்கள் பல செய்பவர்கள் நமது இந்து தர்மத்தை நன்கு உணர்ந்தவர்கள்.

சிலவேளைகளில் இறந்தவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தும் பத்திரிகை விளம்பரம் பல ஆயிரம் ரூபாய்களைத் தாண்டிவிடுவதை நாம் காண்கின்றோம். அதனைச் சிறிது சிக்கனப்படுத்தி முன் குறிப்பிட்டதுபோலப் பாடசாலைகளுக்கும் ஏழைச் சிறார்களின் கல்வி வசதிக்கும் சற்று அதிகமாகச் செலவிட்டால் அது பெறுமதி மிக்கதாயிருக்கும்.

சில ஊர்களில் வீட்டுக்கிருத்தியம் என்பது ஒரு கல்யாண வீட்டைப்போல நடைபெறும். நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள், ஊரவர்கள் என்று ஆயிரம் பேருக்குமேல் அன்று அங்கு விருந்துண்பர். இறந்தவரது வாழ்க்கை வரலாறும் திருமுறைகளும் அச்சிட்ட 'கல்வெட்டு' ஆயிரம் பிரதிகளுக்குமேல் பல ஆயிரம் ரூபாய் செலவில் அச்சிட்டு அனைவருக்கும் வழங்கப்படும். இவை தவறானவையல்ல. மரபுவழிபட்ட நமது கடமைகள் தாம். ஆனால் அன்றைய தினம் ஒரு நூறு ஏழைகளுக்காவது உணவு கிடைக்க அங்கு வழிசெய்யப்படுமானால் அத் தரும கைங்கரியம் இன்னும் உயர்வுடையதாயிருக்கும்.

'கல்வெட்டு' வெளியீடு பற்றிச் சிறிது சிந்திப்பது நல்லது. இறந்தவரின் வரலாறு அன்றைய தினத்துடன் தேவையற்றதாக மற்றவர்களுக்குத் தென்படும். அதனால், அடுத்தநாளிலேயே அந்தக் கல்வெட்டுநூல் ஒன்றுக்கும் உதவாத பொருளாக கால்களில் மிதிபடும். அங்கு அதன் முகப்பில் அச்சிடப்பட்டிருக்கும் அழகிய வண்ணத்திலமைந்த சுவாமிப் படமும் உள்ளே இரண்டு திருச்சிற்றம்பலங்களுக்கிடையில் புனிதமாக அச்சிடப்பட்ட போற்றுதலுக்குரிய நமது திருமுறைகளும் சேர்ந்துதான் மிதிபடுகின்றன. அல்லது இப்புத்தகத்தின் தாள்கள் சாமான் மடிப்பதற்கு, ஏன் மீன் வாங்குவதற்கும்கூடப் பயன்படுவதை நாம் காணலாம்.

சைவ அன்பர்களே, நீங்கள் எல்லோருமே இதுவரை எத்தனைபேரின் வீட்டுக் கிருத்தியத்திற்குப் போய்வந்திருப்பீர்கள். உண்மையில் நெஞ்சைத்தொட்டுச் சொல்லுங்கள். எத்தனை கல்வெட்டுக்கள் உங்களிடம் உண்டு? அவற்றில் எதையாவது நீங்கள் பயன்படுத்தியதுண்டா? அல்லது மறுதலையாக, உங்கள் இல்லத்தில் நடந்த ஒரு வீட்டுக்கிருத்தியத்திற்கு நீங்கள் ஆயிரம் கல்வெட்டுக்கள் அச்சிட்டுக் கொடுத்தீர்களே, இன்று எத்தனை பேரிடம் அவை இருக்கின்றன என்று விசாரித்துப் பாருங்கள். அவை எல்லாம் எங்கே போயின.

இன்னுமொரு கேள்வி. இஸ்லாமிய சமயத்தின் திருநூலாகிய திருக்குர் ஆன் பிரதியை நீங்கள் யாராவது பார்த்திருக்கிறீர்களா? பிற சமயத்தவர்களின் கைகளில் திருக்குர்ஆன் செல்வதைக் கூட அவர்கள் விரும்புவதில்லை. அத்தனை புனிதமாக அதனை அவர்கள் பேணுகிறார்கள். பைபிள் அச்சிட்ட தாளில் எங்காவது சாமான் மடித்துக்கொடுப்பதை நீங்கள் கண்டிருக்கிறீர்களா? உங்கள் திருமுறைகளும்

சுவாமிப்படங்களும் அச்சிட்ட கடதாசியில் யாரும் மீன் சுற்றவில்லை எனக்கூற உங்களால் முடியுமா?

தேவையான இடங்களிலல்லாமல் கண்ட இடங்களிலெல்லாம் திருமுறைகளையும் சுவாமிப்படங்களையும் பயன்படுத்துவதை நாம் உடனடியாக நிறுத்த வேண்டும். முருகன் படமும் வரைந்து 'கந்தன் புறொயிலர் கோழி' என்று விளம்பரம் செய்யும் அசகாயத் துணிச்சல், மாட்சிமை தங்கிய இந்துப் பெருமக்களைத் தவிர வேறு யாருக்கு வரும்?

எனவே, கல்வெட்டு என்பது சிந்திக்கப்படவேண்டியதொன்று, நல்லெண்ணம் படைத்த பல அன்பர்கள் இப்போது இறந்தவர்களின் நினைவாக நல்ல நூல்களை அல்லது வாய்பாடுகள் முதலியவற்றை அச்சிட்டு வழங்குகிறார்கள். இது வரவேற்கத்தக்கது. இதனை யாவரும் பின்பற்ற வேண்டும். அதிகம் கிடைக்காத அருமையான நூல்களை அச்சிட்டு இறந்தவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்பெயரால் வெளியிடுதல் எவ்வளவு புண்ணியமான செயல்.

நமது இந்துசமயமும் நமது ஆலயங்களும் நமது இந்துக்களை இந்துக்களாக வாழ வைப்பதற்கும் சிந்திக்கவைப்பதற்கும் உதவவேண்டும். நாம் அறநெறிச் சிந்தனைகளை நன்கு சிந்தித்து உள்வாங்கி நமக்கும் பிறருக்கும் உண்மையில் நன்மை தரக்கூடிய தர்மச் செயல்களை உள்ளார்ந்த மன ஈடுபாட்டுடன் செய்ய முன்வரவேண்டும். மேடைகள்தோறும் முழங்கும் சமயப் பிரசாரகர்கள் உண்மைத் தர்மம் என்ன என்பதைப் பற்றியும் சமயச்சடங்குகளின் உண்மை நோக்கம் பற்றியும் எடுத்துரைக்க முன்வரவேண்டும்.

இந்து தர்மம் காப்போம், இந்துவாக வாழ்வோம்.

## பன்னிரு திருமுறைகள் அருளிய அருளாளர்கள்

திருஞானசம்பந்தர், வாகீசர், சுந்தரர்,
திருவாத வூரர், மற்றைத்
திருமாளிகைத் தேவர், சேந்தனார் கருவூரர்
தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டரா தித்தர், வேணாட்டடிகள்
வாய்ந்த திரு வாவி யமுதர்
மருவு புருடோத்தமர், சேதிராயர், மூலர்
மன்னுதிரு ஆல வாயார்,
ஒருகாரைக் காலம்மை, ஐயடிகள், சேரமான்
ஒளிர் கீரர், கல்லாடனார்,
ஒண் கபிலர், பரணர் மெய்யுண ரிளம் பெருமானோடு
ஓங்கும் அதிராவடிகளார்,
திருமேவு பட்டினத்தடிகளொடு,
நம்பியாண்டார் நம்பி, சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருள் செய்த
தெய்வீகத் தன்மையோரே!

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் - தொடர் 16

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

திருமந்திரம் நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி நூலாகவே திகழ்கிறது. பாரத நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக ஞானிகளின் அனுபவ உணர்வில் நிலவிவந்துள்ள தத்துவங்களை உபதேசிப்பதற்காக எழுந்த மறைநூலே திருமந்திரம் ஆகும். தவத்திலிருந்து பிறந்த சொற்களான படியால் அவற்றின் ஒலியிலும் நடையிலும் தெய்வீக சக்தி பிரகாசிக்கிறது. வெளிமுகமாகச் செல்லும் ஆன்மாவை உள்முகப்படுத்தி அங்கே இன்ப ஊற்றைக் காணச் செய்வதே திருமூலர் போன்ற மகான்களின் உபதேசமாகும்.

உடம்பை உறுதியாக வைத்திருப்பதற்கான பயிற்சிகளில் யோகப் பயிற்சியும் ஒன்றாகும். யோக புருஷராகிய திருமூலர் தாம் யோகப்பயிற்சியினால் அடைந்த பலன்களைத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்திலே தந்துள்ளார். அழிந்து போகின்ற இந்த உடம்பை உயிர் இருக்கும்வரை ஆரோக்கியத்தோடும் உறுதியோடும் இயங்கும்படி பாதுகாக்கிற பயிற்சிக்கு காயசித்தி உபாயம் என்ற பெயர் வழங்கப்படுகிறது. உடம்பைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை தவயோகி வற்புறுத்துகிறார்.

இந்த உடம்பைக்கொண்டுதான் ஆன்மாவின் நற்கதிக்குரிய உபாயங்களைச் செய்யவேண்டும். ஆன்மா கடைத்தேறுவதற்கான உபாயங்களைச் செய்யாமல் உயிர் உடலைவிட்டு நீங்கிவிட்டால் அரிய மானிடப் பிறவியை எடுத்தும் ஆன்மாவிற்கு எதுவித பலனும் இல்லை. “கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி” என்ற சித்தர் வாக்கே உண்மையாகிவிடும். ஆன்மா அநாதியான பொருள் என்றுமே அழியாது என்பதே சைவசித்தாந்தத்தின் முடிபாகும். உடம்பு அழிந்துவிட்டால் உயிருமே அழிந்துவிடுகிறது எனத் திருமூலர் கூறுகிறார். உயிர் அழிவது என்றால் அடையவேண்டிய பயனை அடையாமல் நஷ்டம் அடைகிறது என்பதே திருமூலரின் கருத்தாகும். உடம்பைக் கருவியாகக்கொண்டு மெய்யறிவைப் பெறாத ஆன்மா உடம்பு அழிந்த பிறகு கழிவிரக்கம் கொள்வதால் பயன் எதுவும் இல்லை. உயிரைப் பாதுகாக்கும் வழியைத் தெரிந்து உடம்பைப் பாதுகாத்தேன் எனத் திருமூலர் தனது அனுபவத்தைப் பின்வரும் பாடலின் ஊடாகக் கூறுகின்றார்.

உடம்பார் அழியில் உயிரால் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கின்ற பரம்பொருளாகிய இறைவனை இந்தப் பிண்டமாகிய உடம்பின் உள்ளே காணலாம் எனத் திருமந்திரம் கூறுகிறது. கோயிலைப் பரிசுத்தமாகவும் புனிதமாகவும் பாதுகாப்பதுபோல இந்த உடம்பையும் பாதுகாக்கவேண்டும். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த நிலையில் உள்ளத்தை

உள்ளத்தை கோயிலாக்கி வாழ்ந்த தவ சீலராகிய திருமூலர் உடம்பையும் இறை வன் வீற்றிருக்கின்ற திருக்கோயிலாகப் பேணவேண்டும் என வற்புறுத்துகின்றார். ஆன்மஞானம் கிடைப்பதற்கு முன்பு உடம்பைத் துச்சமாகக் கருதி உதாசீனம் செய்தேன். ஆனால் இந்த உடம்புக் குள்ளே உறுதுணையான பரம்பொரு ளைக் கண்டபின்பு அந்த உதாசீனத் தைக் கைவிட்டு இவ் உடம்பை நன் றாகப் பாதுகாக்க ஆரம்பித்தேன் எனத் திருமூலர் கூறுகின்றார். "நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட் டேயாம் என்பது நாவலர் பெருமானின் வாக்கும் ஆகும். இறைவன் வீற்றிருக்கும் இந்தப் புனிதமான கோயிலாகிய உடம்பை நாம் இறந்த உயிர்களைப் புதைக்கும் சுடுகாடாக மாற்றக்கூடாது. உடம்பைக் கருவியாகக் கொண்டு திரு வருளைப் பெறலாம் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடலின் ஊடாக அறிய முடிகிறது.

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.

"அளவுக்கு மிஞ்சி உண்ணாதே, அளவுக்கு மிஞ்சி உறங்காதே, அளவுக்கு மிஞ்சி உளராதே" என்பது நமது முன் னோர்கள் நமக்குக் கூறிவைத்த அறிவுரை களாகும். தாளம் பிசகாமல் வாத்தியங் களை இசைப்பதுபோல நாட்டியத்தை ஆடுவதுபோல மனிதவாழ்வில் நாம் செய் யும் செயல்கள் அனைத்திலும் நிதானம் இருக்கவேண்டும். உயிர்ச்சத்தாக இருக் கும் ஜீவசக்தியை அதிகம் விரயம் செய் யக்கூடாது. அளவுக்கு மிஞ்சி விரயம் செய்தால் தீராத நோய்களுக்கு ஆளாக வேண்டிவரும். பிரமச்சரிய விரதத்தை இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்களிடம் அபார சக்திதோன்றும். வீரத்துறவி சுவாமி விவேகானந்தரிடம் இத்தகைய ஆற்றல் சிறப்புப்பெற்றிருந்ததை நாம் அனைவரும் அறிவோம். கருவாய் செயலற்றிருந்தால் மனிதனுக்கு எதுவித இழப்பும் இல்லை. என்கிறார் திருமூலர்.

நாம் உண்ணும் உணவிற்கும் நம்மிடையே தோன்றும் குணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவே யோகசாத்திர நூல்கள் கூறுகின்றன. ஊன், உணவுகளை மிகுதியாக உண் பவர்களிடம் இராட்சத குணம் மிகுந்து நிற்கும். புளித்த உணவுகளை உண்பவர் களிடம் தாமத குணம் மேலோங்கிநிற்கும். மற்ற உயிர்களை வதை செய்து உண் ணாது மரக்கறி உணவுகளை உண்பவர் களிடம் சாத்வீக குணம் விஞ்சி நிற்கும். உயிர் வாழ்வதற்காக உண்ணவேண்டுமே ஒழிய உண்பதற்காக வாழக்கூடாது. சிலர் வயிற்றை வளர்ப்பதையே வாழ்வின் இலட் சியமாகக்கொண்டு வாழ்ந்துவருகிறார்கள். உணவைச் சுருக்கினால் உயிர்ப்பு மிகுதி யாகக் தோன்றும். ஆரோக்கியமான உடலுடன் நீண்ட ஆயுள்பெற்று வாழ லாம். தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுகிறான். (தியானத் யாத்துரு தேய ரூபா) என்றே லலிதா சகஸ்ர நாமமும் கூறுகிறது. யோக நெறி யில் நிற்பவர்கள் சீவனுக்குள்ளே சிவ மணம் பூத்துச் சிவனாகவே மாறிவிடுவார்கள்.

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கின் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டம் கறுத்த கபாலியும் ஆமே.

ஐம்பொறிகளின் துணையினால் தான் ஆன்மா அறிவைப் பெறுகிறது. பொறிகளின் துணையினால் அறிவைப்பெறும் ஆன்மாவை அறிவான பொருள் என்று கூறுவது பொருந்தாது என்பதைப்

பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பேர் நன்றற.

எனத் திருவருட்பயன் கூறுகிறது. ஐம்புலன்களைப் பொருந்தி அறிகின்ற அறிவு, ஐவகைக் கருவிகளைப் பற்றிய அறிவை வேறாக இருந்து அறியும் ஆறாம் அறிவு, பொருள்களின் நன்மை, தீமை களைப் பற்றிய ஆராய்ச்சி உடைய ஏழாவதான அறிவு, கல்வியால் பெற்ற எட்டாவதான அறிவு, அந்த எட்டுடன் வரும் அனுபவம் பற்றிய அறிவு சேர்ந்த போதுள்ள ஒன்பதாம் அறிவு, ஒன்பது வகை அறிவுக்குக் காரணம் சிவசக்தி யாகும் என்பதை அறிந்து அதைப் பிரியாமல் நிற்கும் பதிஞானமான பத்தாம் அறிவு ஆகிய பலவகையான அறிவின் இயல்பை அறிந்து அதற்கேற்ப நடக்காத மானிடர்கள் காலம் வரையறை செய்யப் பட்டு அழிகின்றனர். பதிஞானமாகிய சிவ ஞானத்தைப் பெற்றவர்களுக்கு அழிவே இல்லை. "சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம்" தான் ஆன்ம விடு தலைக்கு வழிவகுக்கும் என்பதைப் பின் வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

உற்றறிவு ஐந்தும் உணர்ந்தறிவு ஆறு ஏழும்
கற்றறிவு எட்டும் கலந்தறிவு ஒன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்றறியாது அழிகின்ற வாறே.

இறையருளைப் பெற்றவர்களுக்கு வாழ்நாளின் எல்லை அகன்றுவிடும். அறிவுக்கு அறிவாய் நின்று இயக்குகின்ற சிவப்பரம்பொருளை அகத்திலே தியானிப் பவர்களுக்கு பிறப்புமில்லை, இறப்பு மில்லை. "பிறப்பதற்கே தொழிலாகி இறக் கின்ற மானிட ஜன்மங்களாக அவர்கள் இருப்பதில்லை. அத்தகைய மெய்யுணர் வினைப் பெற்றவர்கள் வையத்துள் வாழ் வாங்கு வாழும் தெய்வமாகவே போற்றப் படுவார்கள். இவ்வாறு இறையருளைப் பெற்றவர்கள் நரர்களாகிய மானிடர் களுக்குத் தலைவராகி விடுவார்கள். சிவனுடன் இரண்டறக்கூடும் திருவருள் பெற்றவர்கள் எய்தும் பேரின்பப் பெரு வாழ்வு சொல்லில் அடங்காது.

நாட வல்லார்க்கு நமன்இல்லை; கேடு இல்லை
நாட வல்லார்கள் நருபதியாய் நிற்பர்
தேட வல்லார்கள் தெரிந்த பொருள் இது
கூட வல்லார்கட்கு கூறலும் ஆமே.

வாழ்நாளை அதிகரிப்பதற்குரிய தேர்வு ஆயுள்பரீட்சை எனப்படும். அட்டாங்க யோகத்தில் ஏற்படும் பிராணாயாமப் பயிற்சி ஆயுளை அதிகரிக்கச் செய்யும். மூச்சு நீண்டு சென்றால் ஆயுள் குறையும். குறைந்து சென்றால் ஆயுள் நீளும். இறைவனுடைய அருட்சக்தியான பராசக்தியே ஞானியர்க்கு சிவத்தைக் கூட்டி வைக்கிறார்.

கேசரி யோகத்தை அடயோகம், இலம்பிகாயோகம், இராஜயோகம் என மூன்றாகத் திருமந்திரம் பிரித்துக்கூறுகிறது. உடலை வருத்தி பிராணாயாமப் பயிற்சி செய்து தேக சித்திஅடைந்து சமாதி நிலையைப் பெறுதல் அடயோக முறையாகும். இலயயோக முறையில் நாக்கை மடித்து உள்நாக்குப் பிரதேசத்தில் உள்ள துவாரத்தை அடைத்து பிராண செயம் பெற்றுச் சமாதி நிலையைப் பெறுதல் இலம்பிகாயோகம் எனப்படும். அறிவினால் அகண்டபொருளைத் தியானம் செய்து கண்டப்பொருளாகிய தேகத்தில் சக்தியை மாற்றி விடுகின்ற சமாதி நிலையை அடைதல் இராஜயோகம் எனப்படும்.

போகத்தை யோகமயமாக்கும் வழியைப் பரியங்க யோகத்தில் திருமூலர் குறிப்பிடுகிறார். மனித உடலில் கீழ் நோக்குதல் மேல்நோக்கியிருத்தல் என்ற இரண்டு நிலைகள் உள்ளன. உலகத்தை நோக்குதலால் சோர்வும் இறைவனை நோக்குதலால் சோர்வின்மையும் உண்டாகும். உடம்பின் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை ஆறு ஆதாரங்களின் ஊடாக மேலே எழுப்புகின்ற ஞானிகள் அதனை யோக சக்தியாக மாற்றுகிறார்கள். பேரானந்தமயமான அமிர்தத்தைச் சுவைக்கிறார்கள். இதனை உச்சியில் பிச்சை எடுத்தல் எனச் சித்த புருஷர்கள் கூறுகிறார்கள். பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்பவர்கள் குண்டலினி சக்தியைப் போக சக்தியாக மாற்றுகிறார்கள். யோக சக்தியாக மாற்றி அமிர்தத்தைச் சுவைத்தலை மாங்காய்ப்பால் என்றும் போக சக்தியாக மாற்றி வீண்விரயம் செய்வதை தேங்காய்ப்பால் என்றும் குதம்பைச் சித்தர் பின்வரும் பாடலின்ஊடாக குறிப்பிடுகின்றார்.

மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி - குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி

பரியங்கயோகம் என்பது ஆண் பெண் உறவைப்பற்றிக் கூறுகிறது. தலைவனும் தலைவியும் விரும்பிச் செய்யும் யோகத்தில் சந்திர மண்டலம் விளங்கிச் சிரசின்மேல் ஒளியைப் பெறுவர். இவ்வொளியில் இருமனமும் பொருந்தியிருத்தலால் அங்கத்தில் ஒரு காலமும் தளர்ச்சி இருக்காது. இன்பத்தைத் துய்க்கும் போதும் இறைவனை நினைக்க வேண்டும் எனத் திருமந்திரம் கூறுகிறது. இவ்வாறு தெய்வீக நினைப்போடு இணையும் தம்பதிகளின் இணைவால் ஏற்படும் விளைவும் தெய்வீகமானதாகவே இருக்கும். நன்மக்கட்பேறு கிடைப்பதற்கு இத்தகைய இணைவு அவசியமானதாகும்.

வீரியம் உடலில் தங்கும்படி செய்தல் அமுரிதாரணை எனப்படும். உடலில் திருவருள் துணையால் ஊறும் சிவக்குடிநீர் ஒன்றுண்டு. இந்தச் சிவநீராகிய அமிர்தத்தைப் பருகிறவர்களுக்கு

சிவ ஒளிமேலோங்கும், மனமும் ஒடுங்கும், உடல் பொன்மேனிபோலமாறும். வெள்ளை நரமயிரும் மிகக் கருமையாகமாறும். யோக நிஷ்டையில் இருந்து குண்டலினியை மேலே எழுப்பி உச்சியில் அமிர்தத்தை சுவைப்பவர்களுக்கு இந்நிலை ஏற்படும்.

இந்த அமிர்தத்தைச் சிறந்த மருந்தென்றும் தெய்வ மருந்தென்றும், திருவருட்சக்தியின் மருந்தென்றும் நந்தியெம்பெருமானாகிய சிவன் கூறினார். உண்மையுணர்வார் இதனை ஆதி மருந்தெனவும், அகன்ற உலகினை விளக்கும் உடலொளி விளக்கு எனவும் கூறினர். இம் மருந்தின் பெருமை இயம்புதற்கரியது.

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென்றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்ல வொண்ணாதே.

மனிதர்களாகிய நாம் நாளாந்தம் மூச்சுவிடுகின்றபோது மூச்சினை உள் வாங்குவதிலும் பார்க்க வெளியில் விடுதலே கூடுதலாகக் காணப்படுகிறது. வரவுக்கு மிகுதியாகச் செலவு செய்வது போல விரைவில் காலத்தை அளக்கும் காலம் கையில் நாம் அகப்பட்டு விடுகின்றோம். அகத்தவமுடையோர் உயிர்ப்புப் பயிற்சியால் மூச்சை அளவாக விட்டுக் கூடுதலாக உள்ளே தங்க வைத்துக்கொள்கின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு மூச்சை ஒரு சிறிதும் வெளியில் விடாமல் உள்ளேயே அடக்கி வைத்துக் கொள்கிறார்கள். அதனால் அவர்கள் காலம் அளவின்றி நீள்கிறது. திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தார் என்ற வரலாறும் இத்தகையதே ஆகும். இவர்கள் தாமாகவே வேண்டும்போது தம் ஆவியை நீத்துக்கொள்வர். தங்கள் பயிற்சியாகிய நாழியால் யமனை அளக்கின்றனர். சிவனை இடையறாது எண்ணும் அடியவனிடம் யமனுக்கு வேலையில்லை. மார்க்கண்டேயர் சரித்திரம் இதனை நமக்கு உணர்த்துகிறது. "பக்தி வலையில் படுவோன் காண்க" என்ற திருவாசக வரிகளுக்கு ஏற்ப மார்க்கண்டேயருடைய பக்தி வலையில் சிவன் அகப்பட்டுக்கொண்டார். மார்க்கண்டேயருக்காக சிவன் யமனைக் காலால் உதைத்தார். மேலும் இத்தகைய யோகிகள் தூய பரவெளியில் திளைத்திருந்து மீண்டும் அவ்வுடம்புடனே தோன்றுவர். இதனால் அவர்கள் ஊழி முதல்வரும் ஆகின்றனர். இந்த முதன்மை ஸ்தானம் அவர்களுக்கு சிவன் அருளால் கிடைக்கப்பெற்றதாகும். அகத்தவ முயற்சியால் உடம்பில் நெடுநாள் தங்கவல்லாரை சசிவண்ணர் எனத் திருமந்திரம் கூறுகிறது.

ஊழி பிரியாதிருக்கின்ற யோகிகள்
நாழிகையாக யமனை அளப்பர்கள்
ஊழி முதலாய் உயர்வார் உலகினில்
தாழ வல்லார் இச் சசி வண்ணராமே.

(தொடரும்...

அதிகமாகத் தின்பவனுக்கு அறிவு மட்டு.

வாரியார் பக்கம்

# ஆறுமுகம்

-வாரியார் சுவாமிகள்-

**ஆறுமுகப் பரிவோ நுணர் வருள்வாயே:**

ஆறுமுகப் பரிவு என்ற சொற்றொடர் மிகவும் அருமையானது. ஆறுமுகத்தின் தத்துவம் வருமாறு.

பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி, குடிலாசக்தி இந்த ஆறுமே ஆறுமுகங்கள் என உணர்க. குடிலம்- பிரணவமந்திரம். ஆறுமுகங்களில் ஒன்று குடிலை என்ற ஓங்கார மந்திரமாகும்.

*"ஓமெ னப்படுங் குடிலையே ஒப்பிலா முருகன்*
*மாமு கத்துளொன் றாம்அவன் தன்மையார் வகுப்பார்?*

கந்தபுராணம்

*"ஆதியொடும் அந்தம் ஆகியந லங்கள்*
*ஆறுமுகம் என்று தெரியேனே"*

திருப்புகழ்

அன்றி, அகரம், உகரம், மகரம், நாதம், விந்து, கலை இந்த ஆறுமே ஆறுமுகம் என்றும் கூறுவர்.

அன்றி மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்ற அத்துவாக்களும் ஆறுமுகமாம்.

இறைவனுடைய ஆறு குணங்களும் ஆறு திருமுகங்களாம்.

1. சர்வஞ்ஞத சக்தி - முத்தொழில் புரியும்
2. நித்திய திருப்தி சக்தி - எல்லா அநுக்கிரகமும் புரியும்
3. அநாதிபோத சக்தி - எல்லா உயிர்களையும் போகிக்கச் செய்யும்.
4. சர்வ சுதந்திர சக்தி- ஆன்மாக்களுக்கு முத்தியை நல்கும்
5. அலுப்த சக்தி - ஐந்தொழில்களையும் ஆற்றும்
6. அநந்த சக்தி- எல்லா ஆற்றலையும் உண்டாக்கும்

*"ஏவர்தம் பாலு மின்றி எல்லைதீர் அமலற் குள்ள*
*மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்த தென்ப"*

கந்தபுராணம்

**இதுவேயுமன்றி:**

ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்ற குணங்கள் என்றும் கொள்ளலாம்.

*ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே*
*ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே*
*கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே*
*குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே*

*மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே*
*வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே*
*ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்*
*ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.*

இப்பாடலின் கருத்தைத் தொடர்புபடுத்தி,

1. என் உள்ளமாகிய மயிலில் மீது ஏறி விளையாடியும்
2. எனக்குக் குருவாக வந்து உபதேசித்தருளியும்,
3. என்னுடைய வினைகளைத் தீர்த்தருளியும்,
4. என் மாயா பாசங்களை ஒழித்தருளியும்,
5. என் ஆணவ மலத்தை அடக்கியருளியும்,
6. என்னை உன்னோடு புணர்த்தியருளியும்

இவ்வாறு ஆறு திருமுகங்களாலும் எனக்குக் கருணை புரிவாயாக எனப் பொருள் செய்க.

சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்கள் பரத்தை நல்கும். உமாதேவியின் ஒரு திருமுகம் இகத்தை நல்கும்.

ஈசன் திருமுகம் ஐந்தும், உமை திருமுகம் ஒன்றும் சேர்ந்து ஆறு திருமுகங்களாய் விளங்கி, இகம், பரம் என்ற இரு நலன்களையும் வழங்குவது ஆறுமுகம்.

*"இகபர சௌபாக்கியம் அருள்வாயே"*

*திருப்புகழ்.*

---

*(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...*

| | | |
|---|---|---|
| P. றோகினி | உரும்பராய் வடக்கு | 5000. 00 |
| M. சிவகுமார் குடும்பம் | உடுவில் | 2000. 00 |
| V. சுதுஸ்ரிகா திருச்செல்வம் லேன் | கோண்டாவில் | 3000. 00 |
| திருமதி நேசரெத்தினம் | கனடா | 32490. 00 |
| சிவலிங்கம் மகேஸ்வரி | நுணாவில் | 5000. 00 |
| Dr ஓம் பகவான் | அமெரிக்கா | 4000. 00 |
| திருமதி Dr N. நகுலேந்திரன் | அமெரிக்கா | 27390. 00 |
| K.M. செல்வரெட்ணம் | நவாலி கிழக்கு | 5000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் நினைவு | பத்தமேனி | 1000. 00 |
| சி. வேலும்மயிலும் | வட்டுதெற்கு | 4000. 00 |
| ஸ்ரீகரன் அபிலஷா | பிரான்ஸ் | 10000. 00 |
| கைலாசபதி குடும்பம் | இடைக்காடு | 1500. 00 |
| வைரமுத்து குடும்பம் | இடைக்காடு | 500. 00 |
| உமாபதி தொலைத்தொடர்பகம் மூலம் | உரும்பராய் | |
| முத்துத்தம்பி கனகரெட்ணம் நினைவாக (கனடா) | | 6000. 00 |
| திருமதி சின்னையா கரணவாய் | | 2000. 00 |

(தொடரும்....

**வறுமையில் இருந்து கவலைப்படாதே, அதிலிருந்து மீளப்பார்.**

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



இன்று அறிவும் ஆற்றலும் பல மடங்கு அதிகரித்துவிட்டன. இதனால் மனிதவாழ்வின் இலட்சியங்களும் வாழ்க்கைப் போக்கும் மாற்றமடைந்து செல்கின்ற ஒரு குழப்பமான சூழ்நிலை காணப்படுகிறது. ஆனாலும் இந்தக் குழப்பங்கள் மத்தியிலும் இறைவனது திருவருளும் அந்தத் திருவருளிற்கு ஆட்பட்டவர்கள் தொடர்பான விந்தையான செயற்பாடுகளும் என்றும்போல இன்றும் இந்த மக்களிடம் இடம்பெற்றுக் கொண்டிருப்பதையும் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

எமது மண்ணுடனோ மதத்துடனோ தொடர்புபட்டிராத பல அன்பர்களைக்கூட சந்நிதியான் ஆட்கொண்ட பல அற்புத நிகழ்வுகள் பலவற்றை நாம் ஏற்கனவே இந்த மலரில் வெளியிட்டிருக்கின்றோம். இதேபோன்று வவுனியாவில் தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் அன்பர் ஒருவர் தொடர்பான அற்புத நிகழ்வினையும் இந்த மலரில் அடியார்களுக்கு வெளிப்படுத்துகின்றோம்.

பெயர் சிவனு இரத்தினசாமி வயது 49. சற்று உயரமும் மெல்லிய தோற்றமுள்ள இரத்தினசாமி சாந்தமான குணமுள்ளவர். திரு சி. இரத்தினசாமி அவர்கள் தற்பொழுது வவுனியாவில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். ஆலயங்களுக்குத் தொண்டுசெய்தல், ஆலய தரிசனத்திற்காக பல்வேறு ஆலயங்களுக்கும் சென்றுவருதல் ஆகிய காரணங்

களால் தற்பொழுது ஆலயச்சூழலிலேயே இவர் பெரும்பாலும் தங்குவதுண்டு.

திரு சி. இரத்தினசாமி சிறுபிள்ளையாக இருக்கும்பொழுது இவரது தந்தையார் மற்றும் சகோதரங்கள் அனைவரும் நெடுங்கேணியில் வசித்துவந்தனர். இவரது தந்தையார் நல்லமுத்து சிவனு கடவுள் பக்தி உள்ளவர். இதனால் இரத்தினசாமியின் தந்தையார் சிவனு அவர்கள் நெடுங்கேணியில் வசிக்கும்பொழுது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு சென்றுவந்துள்ளார்கள்.

விவசாயியான சிவனு அவர்கள் இரவுச்சாப்பாட்டை முடித்தபின் சற்று ஓய்வாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தனது பிள்ளைகளுக்கு இறைசிந்தனை பற்றிய கருத்துக்களையும், நீதிக்கதைகள் பலவற்றையும் எடுத்துக்கூறி வந்துள்ளார்கள். அந்தச் சந்தர்ப்பங்களில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் பற்றியும் சந்நிதியானது சிறப்புக்கள் பற்றியும் தனது பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறியுள்ளார்கள். அப்பொழுதுதான் 9வயதுச் சிறுவனாக இருந்த இரத்தினசாமிக்கு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் பற்றிய சிந்தனை முதன் முதல் அவரது உள்ளத்தில் ஏற்படத் தொடங்கியது.

ஒன்பது வயதில் இரத்தினசாமிக்கு சந்நிதியானுடைய சிந்தனை ஆரம்பித்தது மட்டுமல்ல காலப்போக்கில் இந்த சிந்தனை தனக்குள் ஒரு திருவருளாக மாற்றமடைந்து வந்ததையும் இரத்தினசாமி அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். அது மட்டுமல்ல ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு செல்லாமலே அந்த ஆலயத்தின் தோற்றம், அமைப்பு, அதன் சூழல் பற்றிய காட்சிகள் அவரது மனக்கண்ணில் தானாக ஏற்பட ஆரம்பித்துவிட்டன.

திரு சி. இரத்தினசாமி வளர்ந்து இளைஞனாக வந்தபின்பு தனது தந்தையாருடன் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு சென்றபொழுது அந்த ஆலயம் தொடர்பாக ஏற்கனவே அவரது மனக்கண்ணில் தென்பட்டது போன்ற பல காட்சிகளை அங்கேகண்ட இரத்தினசாமி அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். இவ்வாறு ஆச்சரியமும் ஆனந்தமுமடைந்த திரு இரத்தினசாமி அவர்கள் சந்நிதியானுடைய அற்புதத்தை வியந்து அவனது திருப்பாதங்களுக்கும் தன்னை அடிமையாக்கிக் கொண்டார்கள்.

விவசாயத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த திரு சி. இரத்தினசாமியும் அவரது பெற்றோரும் சகோதரங்களும் தொழிலின் நிமித்தம் காலப்போக்கில் நெடுங்கேணியிலிருந்து வவுனியாவுக்கு வந்து அங்கே குடியேறினார்கள். வவுனியா நகரத்திலிருந்து ஏறத்தாழ 15 கிலோமீற்றர் தூரத்தில் வடமேற்கு திசையில் குருந்தங்குளம் என்றழைக்கப்படும் பகுதியில் குடியேறி அப்பகுதியில் தனது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடலானார்கள்.

இவ்வாறு திரு இரத்தினசாமி அவர்கள் தனது தந்தையாருடனும் சகோதரர்களுடனும் வவுனியாவிற்கு வந்து குடியேறி துடிப்புள்ள இளைஞனாக விவசாயம் செய்துகொண்டிருந்தாலும் அவரது உள்ளத்தில் எப்பொழுதும் சந்நிதியானுடைய சிந்தனையே ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அதுமட்டுமன்றி சந்நிதிக்குச் சென்று சந்நிதியானைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பமும் நாளுக்குநாள் மேலோங்கிக் கொண்டிருந்தது.

வவுனியாவில் இருந்து செல்வச்

சந்நிதிக்கு செல்வதற்கு முடிவுசெய்த திரு இரத்தினசாமி அவர்கள் அவ்வாறு செல்லுகின்ற செயற்பாட்டை சாதாரணமாக மேற்கொள்ள விரும்பவில்லை. ஆம் வவுனியாவிலிருந்து தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு நடந்து சென்று சந்நிதியானைத் தரிசிக்க வேண்டுமென்று முடிவுசெய்தார்கள்.

திரு இரத்தினசாமி அவர்கள் முடிவுசெய்ததுபோலவே 1980 ஆம் ஆண்டு தஷாப்தகால நடுப்பகுதியில் வவுனியாவிலுள்ள தனது இருப்பிடத்திலிருந்து ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு கால்நடையாகவே நடந்துசெல்ல ஆரம்பித்தார்கள். சந்நிதியானது நினைவுகளால் அவரது உள்ளம் நிறைந்திருந்த நிலையில் எந்த விதமான களைப்போ சோர்வோ இன்றி சந்நிதியானிடம் சென்று அவனை உள்ளம் உருக வழிபடவேண்டுமென்ற உணர்வுடன் நடந்துகொண்டிருந்தார்கள்.

இவ்வாறு இறைசிந்தனையுடன் தனியாக நடந்துகொண்டிருந்தவர் பழைய முருகண்டி ஆலயத்தை அண்மித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவருக்கு பின்பக்கத்தில் இருந்து ஓர் வாகனம் வருவதை அந்தவாகனத்தின் சத்தத்தில் இருந்து இரத்தினசாமி அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். எனவே அந்த வாகனம் தன்னைத் தாண்டிச்செல்வதற்கு வசதியாக சிறிது ஓரமாக விலகி அதற்கு வழிவிட்டவாறு நடந்துகொண்டிருந்தார்கள். ஆனால் அந்த வாகனம் அவரைத் தாண்டிச்செல்வதற்குப் பதிலாக அவருக்கு அருகாக வந்து வேகத்தைக் குறைத்தது மட்டுமல்ல அவருக்கு மிக அருகாமையில் வந்து நிறுத்தப்படுவதையும் இரத்தினசாமி அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

அப்பொழுது அந்தக் காருக்குள் இருந்த நடுத்தரவயதுடைய அந்தப் பெரியவர் இரத்தினசாமி அவர்களைப் பார்த்து எங்கே நடந்துசெல்கின்றீர்கள் எனப் பக்குவமாக வினாவினார்கள். அவ்வாறு இயல்பாகவும் அதேநேரம் பக்குவமாகவும் தன்னிடம் எங்கே செல்கின்றீர்கள் என்று அந்தப் பெரியவர் கேட்டதனால் திரு இரத்தினசாமி அவர்களும் "நான் சந்நிதிக்குப் போகின்றேன்" என்று தான் செல்லவேண்டிய இடத்தை இயல்பாக அவரிடம் வெளிப்படுத்தினார்கள். அதற்கு அந்தப்பெரியவர் காரில் ஏறுதம்பி உன்னை சந்நிதிக்கு அண்மையில் நான் செல்லுகின்ற இடம்வரைகொண்டு சென்று இறக்கிவிடுகின்றேன் என்றுகூறி திரு இரத்தினசாமி அவர்களை தனது காரில் ஏறுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

திரு இரத்தினசாமி அவர்கள் தான் சந்நிதிக்கு நடந்துசெல்லவேண்டுமென்ற முடிவுடன் அதனை செயற்படுத்திக்கொண்டிருந்த நிலையில் தனக்கு எப்பொழுதும் பழக்கமில்லாத ஒரு அன்பர் எந்தவித காரணமுமின்றி தன்மேல் அன்புகொண்டு மிகவும் விநயமாக விடுக்கின்ற அந்த வேண்டுகோளை நிராகரிப்பதா அல்லது ஏற்றுக்கொள்வதா எனக் குழப்பமடைந்தார்கள். ஆனாலும் சந்நிதியானுடைய சிந்தனையுடன் அவனைச் சென்றடைவதற்காக நடந்து சென்றுகொண்டிருக்கின்றநிலையில் நடப்பவை எல்லாவற்றிற்கும் அவனே பொறுப்பு அவனே துணை என்ற ஒரு சிந்தனை அவரது மனதில் மேலோங்கியது. எனவே அந்தப் பெரியவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவரது காரில் ஏறிக்கொண்டார்கள். திரு இரத்தினசாமி அவர்களை

காரில் ஏற்றிய அந்த அன்பர் இரத்தின சாமியை வடமராட்சியில் நெல்லியடிச் சந்திவரைக்கும் அழைத்துச்சென்றார்கள். அங்கே நெல்லியடிச்சந்தியில் உள்ள ஒரு வியாபார ஸ்தாபனத்தின் உரிமையாள ரிடம் இரத்தினசாமியை இறக்கிவிட் டார்கள். அதுமட்டுமன்றி திரு இரத்தின சாமியை செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொண் டார்கள். அவர் கேட்டுக்கொண்டது போலவே அந்த வியாபார ஸ்தாபனத்தின் உரிமையாளரும் திரு இரத்தினசாமி அவர் களுக்கு மிகுந்த மரியாதை செலுத்தி அவரை தனது வியாபார ஸ்தாபனத்தில் அமரவைத்து ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத் திற்கு செல்கின்ற ஒரு பஸ்வண்டியில் ஏற்றி சந்நிதி ஆலயத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

பிற்பகல் 6.00மணியளவில் திரு இரத்தினசாமி அவர்கள் சந்நிதி ஆல யத்தை வந்தடைந்தார்கள். சந்நிதி ஆல யத்தை வந்தடைந்த திரு இரத்தினசாமி அவர்களின் உள்ளமும், உடலும் காந்த சக்தியால் கவரப்படுவதுபோன்ற ஒரு உணர்வால் ஆலயத்தை நோக்கிக் கவரப் படுவதை உணர்ந்துகொண்டார்கள்.

ஆம் ஆலயத்தில் இறங்கியது தான் தாமதம் தனது சிந்தனையும் செயற் பாடும் சந்நிதியானுடன் ஒன்றித்து போனதை அவர் தெளிவாகவே உணர்ந்து கொண்டார்கள். இவ்வாறான உணர்வுகளு டன் சந்நிதியானுடைய புனிதமான ஆற் றில் மூழ்கி நீராடிக்கொண்டார்கள். அப் பொழுது அவரது உடலும் உள்ளமும் மிகவும் தூய்மையடைந்திருப்பதையும் மனதில் என்றுமில்லாத ஒரு அமைதியும் சாந்தமும் ஏற்பட்டிருப்பதையும் அவர் நன் றாகவே உணர்ந்துகொண்டார்கள்.

அதன்பின் ஆலயத்திற்குள் பிர வேசித்த இரத்தினசாமி அவர்கள் சந்நிதி யானுக்கு அர்ச்சனை செய்து மூலஸ் தானத்தில் வேல்வடிவில் வீற்றிருக்கும் முருகப்பெருமானை மனமுருகிவழிபட்டு அவன் அடியவர்கள் மீது காட்டுகின்ற அருளின் அற்புதத்தை நினைத்து ஆனந் தக்கண்ணீர் சொரிந்தார்கள்.

ஆம்! வவுனியாவிலிருந்து சந்நிதி யானை தரிசிப்பதற்கு நடந்துசெல்ல ஆரம் பித்தநேரம் தொடக்கம் சந்நிதியானிடம் வந்துசேர்ந்து அவனை மனங்குளிர வழி பட்டு அங்கே ஆனந்தக்கண்ணீர் சொரி கின்ற நேரம்வரை இடம்பெற்ற நிகழ்வுகள் அனைத்தும் திரு இரத்தினசாமிக்கு மன நிறைவைத் 'தருபவையாகவே அமைந் திருந்தன. அதேபோன்று அவர் எதிர் கொண்ட அனைவரும் அவரை இன்முகத் துடன் எதிர்கொண்டு அவருக்கு அனைத்து உதவிகளையும் வழங்கி செயற்பட்ட நிலைமைகளை எல்லாம் திரு இரத்தின சாமி அவர்கள் ஒருமுறை மீட்டுப்பார்த்து சந்நிதியானது புதுமைகளையும் அவன் அடியவர்கள்மீது காட்டுகின்ற கருணையை யும் எண்ணி உள்ளம் உருகினார்கள்.

"இதுதான் உன்னுடைய பாதை" என சந்நிதி ஆலய வாசலில் சந்நிதியான் இரத்தினசாமியை வழிப்படுத்திய நிகழ் வினையும் ஒருமுறை முருக பக்தனான இரத்தினசாமியின் செயற்பாட்டை அவ தானித்த சிலர் அவரைப் பையித்தியக் காரன் என்று குறிப்பிட்டு பின்பு அவர்கள் கண் எதிரிலேயே நடந்தேறிய விடயத் தைக் கண்டு வாயடைத்துப்போன நிகழ்வு களையும் அடுத்த மலரில் அடியார் களுக்கு வழங்குகின்றோம்.

(தொடரும்...

முயற்சியே மனிதனை இறைவனின் முன்னால் எடுத்துச் செல்கிறது.

உ

# இருள் நீக்கி யருள்சூட்டும் சந்நிதி வேலழகா!

**கலைமணி க. தெய்வேந்திரம் A.I.J.P அவர்கள்**

கருணை விழியொளியான கந்தனே சந்நிதி கதிர்காம வேலழகா
காவடியாடி வந்தோம் அனல்மிதித்தோடி வந்தோம் கலாபத்தில் வந்தருள்வாய்
மேவும் நின்மலர்ப்பாதம் மெய்யடியார் சிந்தையிலே ஞானஒளி உதயங்கண்டோம்
மாயுமோ எம் பாவம் ஆட்சிகொள் நினதாடல் ஒலியால் வெல்வாய்!

பாய்ந்துவரும் சுழல் வினைகள் பாரினில் கொஞ்சமல்ல
படர்மணித் தண்டையும் சிலம்பும் பளபளத் தொலிக்கையிலே
பாசமும் நேசமும் பன்னிருகரத்துயர்வேலும் பூவரசமரத்தில் கண்டோம்
பூர்வீகக் கந்தாவுன்தன் புனித மேனி திருமஞ்சனமும் தொண்டைமானாற்றங் கரையாம்!

எக்காலும் பாடியாட என்றுமே யெம்மருகில் நின்றுவிட்டாய்
முக்காலுமுணர்ந்து கொண்டோம் முருகாவுன் நாமந்தனை
இக்காலும் இருள்நீக்கி யெமையாளும் அருள்வடிவானவனே
பொற்காலம் புகழ் பூத்த ஞானச்சுடர்ச் செல்வச்சந்நிதி பெருமானே!

உன் நினைவகலா நெஞ்சத்தருள் கொடய்யாஎமக் கென்றும்
உறு பலவினைகள் மாளவென்றும் ஆல்விழுதாடுவாய் திருவூஞ்சல் வேலா
ஆரூரன் சேயே நிதம் அன்பர்க்கு நேசவலையாக வித்தை காட்டியருள்வாயே
பேசிடாது பூஜைசெய்யப் பெருமான் பணிபூண்டவிடம் சந்நிதியாம்!

துளசிப்பூ செவ்வரத்தை சூழ்கொன்றை நொச்சிமலர் வண்டுற்ற தொண்டையாற்றில்
பாசிமணி பன்னாடை பளிங்குக்கல் முத்தூரல் மேவியலைவீசி யெழுதலம்
தூசியாய்ச் சுழன்று மெய்நடுங்கி கைவலைக்காவுடனே சீர்பூத்த கதிர்காமருள்ளம்
பானமெனுமுருகவேழ் பயின்று பதிந்து பதமலர் நிலைத்த விடம் சந்நிதியாம்!

கோனகநதியூற்றில் கொண்டாடும் பத்தர்குழாம் தானாக வந்தணையும் சேயே
வேலாக வந்து மேலாகக் கரைபுரண்டெழுந்து துயர்தூர்க்குமிடம் சந்நிதியாம்
மானின்வள்ளி மருட்சிகொள் தெய்வயானை சூழப்பெற்றசாமியே சந்நிதியாம்
மா-மருது-ஆல்-பலா-வாழை பூவினினம் தேன்சொரியும் மங்கலத்தொனிபூஜை தானம் நிறைவுகொள் சந்நிதியாம்!!

**தீப்பட்ட குழந்தை நெருப்புக்கு அஞ்சும்.**

உ

# தமிழகத் திருக்கோயில் வரிசை

## திருநல்லூர்ப் பெருமணம் - ஆச்சாள்புரம்

சிதம்பரம்- சீர்காழிப் பாதையில் கொள்ளிடம் ஊரிலிருந்து இடதுபுறம் 8கி.மீ தூரத்தில் உள்ள இந்த ஸ்தலம் தற்போது "ஆச்சாள்புரம்" என வழங்கப் படுகிறது. திருஞானசம்பந்தர் திருமணக் கோலத்துடன் ஜோதியினுள் கலந்த ஸ்தலமாகையால் "முத்தித்தலம்" எனப் படுகிறது.

சாதாரணமான ஒரு சிறிய கோயில். இறைவன்: சிவலோகதியாகேசர், இறைவி: வெண்ணீற்று உமைமங்கை. புல்லும் புதரும் நிரம்பிய திறந்த ஒரு பிரகாரம். ஒரு முன் மண்டபம். கருவறை. பிரகாரத் தில் பிள்ளையார், முருகன் அம்பாளுக் குத் தனிச் சந்நிதிகள் மண்டபத்தின் இடது பக்கம் திருஞானசம்பந்தர்- தோத் திர பூரணாம்பிகையுடன் உள்ள மூலத் திருமேனி காணப்படுகிறது. கருவறையில் சிவலோக தியாகேசர் இலிங்க வடிவில் உள்ளார்.

(பெரியபுராணப் பாடல் இல 3134- 3154 வரையிலான ஞானசம்பந்தர் வரலாற்றின் இறுதிப் பகுதியின் பொழிப் புரையை, இந்தக் கோயிலின் முக்கியத் துவம் கருதி அப்படியே இங்கே தந்துள்ளேன்)

"........ திருஞானசம்பந்தர் நல்ல தவத்தையுடைய கன்னிகையின் கையைத் தம் செம்கையாற் பிடிப்பதற்கு உரிய வேளை வந்து சேரவே, கன்னிகையைப் பெற்ற தாய் தந்தையரும் உடன் பிறந்த சகோதரரும் மணப்பெண்ணை முன். அழைத்து வந்து வலதுபுறம் அமரச் செய்தனர்....."

நன்கு அழகுபடுத்தப்பட்ட பந்த ரின் நடுவில் திருநீலநக்கநாயனார் ஆசாரி யராக இருந்து சடங்குகளை முறைப்படி செய்து, நெற்பொரியைக் கையிலெடுத்து வேள்வித்தீயில் ஆகுதி செய்து, மணமக் கள் அக்கினியை வலம்வரும்வேளை, "இந்த அக்கினி இடபக் கொடியினை உயர்த்திய சிவபெருமானே" என ஞான சம்பந்தர் தெளிந்து, உலகப்பற்று நம் மைச் சாராது நீங்க இறைவனுடன் சேர விரும்பியவராய்த் திருப்பெருமணம் கோயி லினுள்ளே போய்க், "கல்லூர்ப் பெரு மணம்" என்று தொடங்கும் பதிகத்தை, அத்திருமணத்தைக் காணவந்தோரின் பிறவிப்பிணி நீங்குமாறு பாடியருளினார்.

தேவாதி தேவனான சிவபெரு மானும் திருவருள் செய்து, "நீயும் நின் மனைவியும், இங்கு உன் புண்ணிய திரு மணத்திற்கு வந்த எல்லீரும் இந்த ஜோதியினுள் வந்து அடையுங்கள்" எனத் திருவாய் மலர்ந்தருளியதும், சோதிலிங்க மாய்ப் பரந்து நிமிர்ந்து எழுந்து, ஜோதிக்கு ஒரு வாயிலையும் அமைத்துக் காட்டவே, சீர்காழித் தலைவர் ஜோதியை வணங்கித் துதித்து, "காதலாகிக் கசிந்து....." என்னும் நமச்சிவாயத் திருப் பதிகத்தைப் பாடி, "இந்தத் திருமணத்திற்கு வந்த அனைவீரும் இழிவான பிறவி நீங்க இவ்வொளியிற் புகுக" என ஆணையிட, வந்திருந்த அனைவரும் நிலையான அந்தப் பேரொளியிற் புகுந்தார்கள்.

திருநீலநக்க நாயனார், திருமுருக நாயனார் முதலிய தொண்டர்களும், சிவபாதவிருதயர், நம்பியாண்டார் நம்பி

திருநீலகண்ட யாழ்ப்பாணர் மற்றும் அங்கு வந்திருந்த அனைவரும் தத்தம் மனைவியருடன் ஜோதியினுள்ளே புகுந்தனர்.

அனைவரும் உடன் புகுந்து ஜோதியினுள் ஒடுங்கியபின், ஞானசம்பந்தர் பூரணாம்பிகையின் கையைப்பற்றிய வாறே அதனுள்ளே புகுந்து, சிவானந்தத்தின் நிறைவான வீட்டுப்பேற்றினை அடைந்தார். அதன் பின்னர், இறைவனும், ஜோதியையும் அதன் வாயிலையும் மறையுமாறு செய்தருளவும் சிவலோகத் தியாகேசரின் பழைய பெருமணக் கோயில் மீண்டும் தோன்றியது....."

பி.கு: திருஞானசம்பந்தர் திருமண வேளையில் ஜோதியினுள் கலந்த இடம். ஒவ்வொரு வைகாசி மூலநாளில் இங்கு ஞானசம்பந்தர் திருமணவிழாவும் - ஜோதியினுள்ளே கலந்த விழாவும் பெருவிழாவாக நடைபெறுகிறது.

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தலம்
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம பரனே.

*(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி....*

| | | |
|---|---|---|
| R. ரவீந்திரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 35000. 00 |
| M. இந்துசேகரம் குடும்பம் | அவுஸ்திரேலியா | 40000. 00 |
| சி. மகாலிங்கம் இராசவீதி | நீர்வேலி | 1மூடை அரிசி |
| ஸ்ரீகுகன் கீரன் மிதுஷன் | இடைக்காடு | 3000. 00 |
| கருணாகரன் கவிதா கச்சேரி | நல்லூர் | 3000. 00 |
| திருமதி சோமசேகரம் விஜயலெட்சுமி (கனடா) | திருநெல்வேலி | 5000. 00 |
| கிருஸ்ணசாமி தெய்வநாயகி | மீசாலை | 5000. 00 |
| நவரெத்தினராசா வித்தியாதரன் | இளவாலை வடக்கு (மலேசியா) | 3000. 00 |
| நமசிவாயம் ஸ்ரீமதி | இளவாலை வடக்கு | 5000. 00 |
| செல்லையா நமசிவாயம் | இளவாலை வடக்கு | 7200. 00 |
| கி. சிவப்பிரகாசம் | புலோலி | 5000. 00 |
| வ. புவனேஸ்வரி அம்மா | ஆவரங்கால் | 1000. 00 |
| Dr G. பவானி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சுவீதரன் சாந்தினி | நவக்கிரி | 3000. 00 |
| க. நடேசன் (தெணியான்) | வதிரி | 1000. 00 |
| ப. வல்லிபுரநாதன் (கனடா) புலவர் இல்லம் | உடுப்பிட்டி | 5000. 00 |
| சிவதொண்டன் நிலையம் | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| Dr க. சிவஞானசூரியர் | கொழும்பு | 6000. 00 |

(தொடரும்...

**ஏமாற்றுதல் என்பது மிகச்சிறிய முள், அதனைப் பிடுங்கி எறிவது கடினம்.**

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

07-03-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**விடயம்:- "இன்னிசைக் கச்சேரி"**

**வழங்குபவர்:- கலாபூஷணம் வ. செல்லத்துரை அவர்கள்**

**பக்கவாத்திய சகிதம்**

---

14-03-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:- "தெய்வயானை திருமணம்"**

**வழங்குபவர்:- பண்டிதர் சி. வேலாயுதம்**

(இளைப்பாறிய அதிபர்)

---

21-03-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:- "பெரியபுராணம்" (தொடர்)**

**வழங்குபவர்:- அ. குமாரவேல்** (சிரேஷ்ட விரிவுரையாளர்)

(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

28-03-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 123ஆவது மாத வெளியீடு

## பங்குனி – 2008

**வெளியீட்டுரை:- திரு வ. கணேசமூர்** (அதிபர்)

(யா/ தொண்டைமானாறு வீ.ம.வி)

**மதிப்பீட்டுரை:- மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்**

(யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயம்)

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பா

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபா

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பா

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

சுபமங்களம்
நன்றி